REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 14 | செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுட பங்குனி 13ஆம் நாள் வியாழக்கிழமை 26 மார்ச் 2020 வள்ளுவர் ஆண்டு 2051



# 500 இலங்கையருக்கு கொரோனா?

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத் தலைவர் சந்தேகம்

கொழும்பு, மார்ச் 26
இலங்கையில் 500க்கும் மேற்பட்டவர்கள் கொரோனா தொற்றுக்கு இலக்காகியிருக்கலாம் என்று இலங்கை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் அனுரத்த பாதனிய சந்தேகம் வெளியிட்டார். 2A

# வடக்கில் நாளை ஊரடங்கு தளர்வு

## ஊரடங்கை மீறியதாக நாடு முழுதும் 3,700 பேர் கைது

கொழும்பு, மார்ச் 26
வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களிலும், புத்தளம் மாவட்டத்திலும் நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணி வரை பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்த மாவட்டங்களில் வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியிலிருந்து மீண்டும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்படவுள்ளது. 2A

# இளவரசர் சாள்ஸுக்கு கொரோனா

லண்டன், மார்ச் 26
இங்கிலாந்து இளவரசர் சாள்ஸுக்குக் கொரோனாத் தொற்று இருப்பது நேற்றுத் தெரியவந்துள்ளது.
இது இங்கிலாந்திலும் சர்வதேச சமூகத்திலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.
இங்கிலாந்தின் அரச குடும்பத்துக்குள் கொரோனா தொற்றக்கூடிய சாத்தியக்கூறு உள்ளது 2A

# கொரோனா பலி 20,000

பீஜிங், மார்ச் 26
கொரோனா வைரஸ் காரணமாக உலக அளவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 20 ஆயிரத்தைத் தாண்டியது.
ஐரோப்பிய நாடான ஸ்பெயினில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சீனாவை விடவும் அதிகரித்தது.
சீனாவின் வுகான் மாநகரத்தில் கடந்த டிசெம்பர் இறுதியில் கொரோனா அவதானிக்கப்பட்டது. அதன் பின்னர் சீனாவெங்கும் கொரோனா 2A

# கொரோனாவை மறைக்க பொலிஸாருக்கு லஞ்சம்!

'திடுக்' தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 26
சுவிஸிலிருந்து வந்த மதபோதகர் சிவராஜ்போல் சற்குணராஜாவுக்கு கொரோனா தொற்று இருப்பதை மறைக்க பொலிஸாருக்குப் பெருந்தொகைப் பணம் வழங்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் உள்ளது. அதனை விட அவர்கள் அதனைப் போலி மருத்துவச் சான்றிதழுடன் நிரூபிக்கவும் முயற்சிகள் மேற்கொண்டனர். இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. 02

# ஊரடங்கின் நோக்கம் தோல்வி

## ஆனல்ட் ஆதங்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 26
"நாட்டில் ஊரடங்கு, நடைமுறைப்படுத்தப்படுகின்றபோதும், அது தளர்த்தப்படும் நேரங்களில் ஊரடங்கின் நோக்கம் அர்த்தமற்றதாகிவிடுகின்றது" என்று யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ. ஆனல்ட் தெரிவித்தார். 02

# கொரோனா: கொழும்பு முதலிடம்

கொழும்பு, மார்ச் 26
இலங்கையில் அதிக கொரோனா தொற்றாளிகள் கொழும்பு மாவட்டத்திலேயே அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
இலங்கையில் 102 பேர் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இவர்களில் 99 பேர் மருத்துவமனைகளில் தங்க 02

# திருமலை போதகரும் தனிமையில்

கொழும்பு, மார்ச் 26
யாழ்ப்பாணம் அரியாலையில் சுவிஸிலிருந்து வந்த மத போதகரால் நடத்தப்பட்ட ஆராதனையில் கலந்துகொண்ட போதகர் ஒருவர் குடும்பத்தாருடன் திருகோணமலையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.
திருகோணமலை உப்பு 02

# ஊரடங்குச் சட்டத்தை நீடிப்பது பற்றி அமைச்சரவையில் பேச்சு

கொழும்பு, மார்ச் 26
நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் ஊரடங்குச் சட்டத்தை நீடிக்க அமைச்சரவை நேற்றுப் புதன்கிழமை நீண்ட ஆலோசனைகளை நடத்தியுள்ளது. அதேவேளை, ஊரடங்குச் சட்டம் இருந்தாலும் அத்தியாவசிய சேவைகளை தொடர்ச்சியாக வழங்குவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.
அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி கோத்தாபய தலைமையில் ஜனாதி 02

# யாழ். போதனாவில் சேர்க்கப்பட்டோருக்கு கொரோனா இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 26
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த 23ஆம் திகதியும் நேற்றுமுன்தினமும் சேர்க்கப்பட்ட எவருக்கும் கொரோனா தொற்று இல்லை என்று மருத் 2A

# வதந்தி பரப்பியவர் கம்பி எண்ணுகிறார்

கொழும்பு, மார்ச் 26
கொரோனா வைரஸ் தொடர்பில் பேஸ்புக் ஊடாக வதந்திகளைப் பரப்பியமை தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள் 2A

முச்சந்தி முரளி




# கொரோனா தொற்று நேற்று இல்லை

கொழும்பு, மார்ச் 26
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று மாலை 6 மணிவரை எவரும் அடையாளம் காணப்படவில்லை என்று சுகாதார அமைச்சு தெரிவித்தது.
இதன்படி நேற்று மாலை வரையில் இலங்கையில் மொத்தமாக 102 பேர் 2A

# வேளாண் உற்பத்திகளை விவசாயிகளே விற்கலாம்!

## பல இடங்களிலும் சிறப்பு அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 26
விவசாயிகள் தங்களின் உற்பத்திப் பொருள்களை தங்களின் இடங்களில் அல்லது தங்கள் கிராமங்களில் வைத்து விற்பனை செய்யமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தின் நல்லூர் பிரதேச சபையும் வவுனியா நகர சபையும் இதற்கு அனுமதி வழங்கியுள்ளன. சாவகச்சேரி நகரிலும் விசேட திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் உற்பத்திகளைக் குறைந்த விலையில் கொள்வனவு செய்யும் வர்த்தகர்கள் அறா விலையில் பொதுமக்களுக்கு விற்றுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. கொரோனா தொற்றுக் காரணமாக நடைமுறைப்படுத்தப்படும் ஊரடங்கு காரணமாக தமது உற்பத்திப் பொருள்களை விற்கமுடியாது விவசாயிகள் திண்டாடிவருகின்றனர். ஊரடங்கு நீக்கப்படும் குறிப்பிட்ட சில மணித்தியாலங்களில் தேவையான மரக்கறிகளை நெருக்குவாரமின்றிக் கொள்வனவுசெய்ய முடியாதவாறு பொதுமக்களும் இடைஞ்சல்களை எதிர்கொள்கின்றனர். இந்த நிலையில் மேற்குறித்த சபைகள் ஆக்கபூர்வமான தீர்மானத்தை அறிவித்துள்ளன.

**திருநெல்வேலி**

நல்லூர் பிரதேச எல்லைக்கு உட்பட்ட பிரதான பொதுச் சந்தையான திருநெல்வேலி சந்தை ஊரடங்கு சட்டம் தளர்த்தப்படும் போது இடமாற்றம் செய்யப்பட்டு பல குழுக்களாக வெவ்வேறு இடங்களில் இயங்க வைக்கப்படவுள்ளது என்று நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் த.தியாகமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும்போது மக்கள் சந்தைகளில் மரக்கறிகளை கொள்வனவு செய்ய வருகின்றனர். அவர்களின் தொகையைக் கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. எனவே பிரதேச சபையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

எனவே, இனிவரும் காலங்களில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும்போது சந்தையை இடமாற்றம் செய்ய முடிவெடுத்துள்ளோம். சந்தைக்கு வரும் வீதிகளில் பல இடங்களிலில் சந்தை வியாபாரத்தை மேற்கொள்ள தீர்மானித்துள்ளோம். மக்கள் சந்தைக்கு வரும் வீதிகளில் உள்ள வியாபாரிகளிடம் மரக்கறிகளைக் கொள்வனவு செய்ய முடியும்.

திருநெல்வேலி மரக்கறி வியாபாரத்தை கலாசாலை வீதியில் 'அரசடி அம்மன் ஆலயம் முதல் முத்துத்தம்பி மகா வித்தியாலயம்' வரையான பகுதியில் வீதியின் ஒருபக்கத்திலும்', திருநெல்வேலி விவசாயப்பண்ணைப்பகுதியிலும், ஆடியபாதம் வீதியில் 'இராமசாமி வைத்தியசாலை பகுதியிலும்', பலாலி வீதியில் 'தினேஷ் பேக்கரி மற்றும் பலாலி வீதியின் ஒரு பக்கத்திலும், ஆடியபாதம் வீதியில் 'கொக்குவில் பொது நூலகப்பகுதியிலும்', 'கிராமப் புறங்களில் பொது அமைப்புக்களின் முன்றலிலும்' வியாபாரத்தில் ஈடுபடமுடியும். திருநெல்வேலி சந்தையில் வியாபார நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப் பட்டுள்ளன என்றார்.

**சாவகச்சேரி**

கொரோனா வைரஸ் தாக்கத்தின் விபரீதத்தை உணராது மக்கள் செயற்படுகின்றனர். எனவே ஊரடங்கு தளர்த்தப்படும் நேரத்தில் சாவகச்சேரி நகரில் சந்தையை மூடி வட்டாரத்துக்கு ஒரு சந்தையும் மேலதிகமாக நடமாடும் சந்தையையும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று நகர சபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகரசபையின் 11வட்டாரங்களிலும் 11சந்தைகள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மேலதிகமாக மக்களின் மரக்கறி மற்றும் கடலுணவுத் தேவைகளை பூர்த்தி செய்யும் முகமாக நடமாடும் சந்தையும் இன்று வியாழக்கிழமை தொடக்கம் நடத்தப்படவுள்ளது.

நகரசபை எல்லைக்குட்பட்ட பொதுமக்கள் தமது மரக்கறி மற்றும் கடலுணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத பட்சத்தில் 0771999624 என்ற தனது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தேவைகளை உடனடியாகப் பூர்த்தி செய்துகொள்ள முடியும். என்று தெரிவித்தார்.

**வவுனியா**

வவுனியாவில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும்போது விவசாயிகள் தங்கள் உற்பத்திப் பொருள்களை தாங்களே எடுத்துவந்து விற்பனை செய்துகொள்ள முடியும். அதற்காக சில பகுதிகளை நாம் ஒதுக்கியுள்ளோம் என்று வவுனியா நகர சபைத் தவிசாளர் கௌதமன் தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதைத் தெரிவித்தார்.

காமினி மகா வித்தியாலத்துக்கு முன்பாகவும், கொறவபொத்தான வீதியில் ரோயல் உணவகத்துக்கு முன்பாகவும், தமிழ் மத்திய மகா வித்தியாலத்துக்கு முன்பான பகுதி மற்றும் புதியபேருந்து நிலையத்துக்கு முன்பான பகுதிகளில் அவற்றை முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ளோம்.

அத்துடன் நகரில் சில்லறை மரக்கறி விற்பனையில் ஈடுபடும் வியாபாரிகளையும் அந்த பகுதிகளில் வியாபாரம் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்குவுள்ளோம். அவ்வேளை, மொத்த மரக்கறி விற்பனைச் சந்தையில் சில்லறை வியாபாரம் மேற்கொள்ளத் தடைவிதிக்கப்படும்.

இதுமட்டுமன்றி, சனநெரிசலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் சில வீதிகளை மூடுவதற்குத்தீர்மானித்துள்ளோம். அதன்படி சந்தைச் சுற்றுவட்ட வீதிக்குள் நுழையும் அனைத்து குறுக்கு வீதிகளையும் மூடுவதற்குத் தீர்மானித்துள்ளோம். அதற்குள் வாகனங்களில் பயணிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்தவே இந்த நடைமுறைகள். இந்தச் செயற்றிட்டங்களுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (த20,110,159)

### ஊரடங்குச்...

பதி செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. இதன்போது கொரோனா வைரஸ் தாக்கம் குறித்தும் அது பெருமளவில் கட்டுக்குள் வந்திருப்பது குறித்தும் ஜனாதிபதி அமைச்சர்களுக்கு விளக்கினார். இன்னும் சில வாரங்களில் இது முழு அளவில் கட்டுக்குள் கொண்டுவரப்படும் என்று ஜனாதிபதி இங்கு நம்பிக்கை வெளியிட்டார்.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டு ஒரே நேரத்தில் மக்கள் அணிதிரள்வதால் வைரஸ் தொற்று பரவும் அபாயம் இருப்பதாக அமைச்சர்கள் இங்கு சுட்டிக்காட்டினர். அதனை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி சில மாவட்டங்களில் பகுதி பகுதியாக ஊரடங்கை நடைமுறைப்படுத்துவது பற்றி பாதுகாப்புத் தரப்புடன் பேசப்படுமென குறிப்பிட்டார்.

புத்தாண்டு வருவதால் மக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்பதால் அதற்கு முன்னர் இதனைக் கட்டுக்குள் கொண்டுவர அரசு அதிகபட்ச முயற்சிகளை எடுப்பதாக இங்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறினார்.

இந்த இக்கட்டான காலப்பகுதியில் மீனவர்கள் பிடிக்கும் மீன்களைக் கொள்வனவு செய்வதற்காக இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்துக்கு 600 மில்லியன் ரூபாவை வழங்க அமைச்சரவை தீர்மானித்தது. அதேசமயம் வடக்கு, கிழக்கில் இந்த நிலைமையால் பாதிக்கப்பட்டுள்ள ஏழை மக்களுக்கு துரித நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று இங்கு வலியுறுத்தப்பட்டது. நிவாரணப்பணிகளுக்காக இந்தியாவின் கடன் உதவியின் ஒரு பகுதியை பயன்படுத்தவும் அமைச்சரவை உத்தேசித்துள்ளது. (ஒ,5,22)

### கொரோனாவை...

இது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வடக்கு மாகாணக் கிளையினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரனை, யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் அதிகாரி மிரட்டிய சம்பவம் தொடர்பில் வடக்கு மாகாண மருத்துவ அதிகாரிகள் சங்கம் பதில் பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடுகளை மேற்கொண்டுள்ளது. இதற்கு அமைவாக, இது தொடர்பான விசாரணைகள் பதில் பொலிஸ்மா அதிபரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரை அழைத்து மன்னிப்புக் கோரினார்.

சுவிஸிலிருந்து வந்த மதபோதகருக்கு கொரோனா தொற்று இல்லை என்று இரண்டு தடவைகள் ஊடக அறிக்கை வழங்கியதும் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரிதான். பிலதெனியா தேவாலயத்தால், மதபோதகருக்கு கொரோனா தொற்று உள்ளதை மறைக்க அவர்களுக்குப் பெருந் தொகைப் பணம் வழங்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் உள்ளது. மேலும் அவர்கள் அதைப் போலி மருத்துவ சான்றிதழுடன் நிரூபிக்க முயற்சித்தார்கள்.

மதபோதகருக்கு கொரோனா தொற்று உள்ளது என்பதை, சுவிஸ் உள்ள இலங்கைக்கான தூதரகம் மூலம் வடக்கு மாகாண ஆளுநர் நிரூபித்தார்.

எனவே தேவாலய நிர்வாகத்தினர், ஆராதனையை ஒழுங்குபடுத்திய மதபோதகர் ஆகியோருடன் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரியும் தண்டிக்கப்பட வேண்டும், என்றுள்ளது. (ஒ,5)

### ஊரடங்கின்...

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: ஊரடங்குச் சட்டம் நேற்றுமுன்தினம் தளர்த்தப்பட்டபோது ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் யாழ்ப்பாண நகரில் கூடியிருந்தனர்.

கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதே அதற்கான நோக்கம். ஆனால் நோக்கம் வலுவற்றதாகிவிடுவதை அவதானிக்க முடிந்தது.

கொரோனா தொற்றிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்காக முன்வைக்கப்படும் ஆலோசனைகளான தனிமைப்படுத்தல், கைகளை கழுவுதல், சுத்தமாக இருத்தல், இரு நபர்களுக்கிடையில் குறிப்பிட்ட இடைவெளியை பேணுதல் என்பன ஊரடங்கு தளர்த்தப்படும் சந்தர்ப்பங்களில் மீறப்படுகின்றன.

எனவே புதிய முறைமை ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களினதும் எல்லைப் பரப்பினுள் இலகுவாக மக்கள் தமக்கான பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கான முறைமைகளை ஏற்படுத்தி நகர்ப் பகுதியில் பலர் ஒன்று கூடுவதை தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. இதை கணக்கிலெடுக்காது விடுவோமாக இருந்தால் மக்கள் ஒன்று கூடுவதன் மூலம் ஏற்படும் சிக்கலைக் கட்டுப்படுத்த முடியாது போய்விடும்.

எனவே மருத்துவர்களை உள்ளடக்கியதாக ஆளுநர் தலைமையில் விசேட கலந்துரையாடல் ஒன்றை விரைவில் நடத்துவது தொடர்பில் முயற்சிக்க வேண்டும். என்றார். (த20)

### கொரோனா...

வைக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றனர். மேலும், கொரோனா தொற்றுக்குள்ளான சந்தேகத்தில் 229 பேர் தொடர்ந்தும் மருத்துவக் கண்காணிப்பிலுள்ளனர். அதிக கொரோனா தொற்று நோயாளிகள் கொழும்பு மாவட்டத்திலேயே அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பை அடுத்து களுத்துறை மாவட்டம் இரண்டாவது இடத்திலும், கம்பஹா மாவட்டம் மூன்றாவது இடத்திலும் உள்ளன என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதனால்தான் இம்மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கிய மேல் மாகாணம் கொரோனா அதி அபாய வலயமாக அரசால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, புத்தளம் மாவட்டம் நான்காவது இடத்திலும், இரத்தினபுரி மாவட்டம் ஐந்தாவது இடத்திலும் உள்ளது என சுகாதார அமைச்சு மேலும் கூறியுள்ளது. (ஒ,5,22)

### திருமலை...

வெளி, பள்ளத்தோட்டம் பகுதியில் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்மருத்துவர்வி.பிரேமாநந்தன் தெரிவித்தார்.

போதகருடன் அவரின் மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகள் தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

இவர்கள் தற்போது வரை உடல்நலத்துடன் இருக்கின்றார் எனவும் வைத்தியர் வி.பிரேமாநந்தன் தெரிவித்தார்.

எனினும், அரியாலையிலிருந்து திரும்பியதும் இவருடன் தொடர்புகளைப் பேணியவர்கள் தொடர்பில் தற்போது ஆராயப் படுகின்றது. (ஒ,5,22)

# கண்ணுக்குதெரியாத வைரஸூடன் யுத்தம்!

## ஒத்துழைக்கக் கோருகின்றார் கிளி. மாவட்டச் செயலர்

**கிளிநொச்சி,மார்ச் 26**

**கண்ணுக்குத் தெரியாத வைரஸூடன் நடக்கும் யுத்தத்தை வெற்றிக்கொள்ள பொது மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் கோரிக்கை விடுத்தார்.**

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படுகின்ற நேரங்களில் பொது மக்கள் அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக அதிக ளவில் ஒன்று கூடுகின்றனர். கொரோனா வைரஸ் தொற்றைத் தடுப்பதற்கு அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைகள் அனைத்தையும் இந்த நடவடிக்கை சில மணி நேரங்களுக்குள் கேள்விக்குள்ளாக்கி விடுகிறது.

எனவே தான் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படுகின்ற போது, பொது மக்கள் அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்குரிய விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கிராமங்களிலும், கிராம அலுவலர் மூலம் தெரிவு செய்யப்படுகின்ற வியாபார நிலையங்களைக் குறிப்பிட்ட நேரங்களில் திறந்து, பொதுமக்களுக்கான பொருள்களை வழங்கவும், தொலைபேசி அழைப்பின் ஊடாக வீடுகளுக்கான பொருள்களை விநியோகிப்பதற்கும், இந்த வியாபார நிலையங்களுக்கான பொருள்களை மாவட்டத்தில் உள்ள மொத்த வியாபாரிகள் மூலம் கிராமங்களுக்குச் சென்று வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகள் மூலமும் அத்தியாவசியப் பொருள்கள் விநியோகிக்கப்படும்.

விவசாயிகளிடம் இருந்து மரக்கறிகள் அந்தந்த கிராமங்களில் தெரிவு செய்யப்படுகின்ற இடங்களில் விற்பனை செய்யப்படும். அவற்றை கூட்டுறவு அமைப்புகளின் ஊடாக விற்பனை செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு இல்லை. தேவைப்படும் அத்தியாவசியப் பொருள்களை மாவட்டத்துக்குள் கொண்டு வருவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே பொதுமக்கள் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படுகின்ற நேரங்களில், நகரில் ஒன்று கூடுவதைத் தவிர்க்கவும். என்றார். (க214,222)

## மரக்கறிப்பொதிகள் மக்கள் வீடுகளுக்கு!

யாழ்ப்பாணம், மார்ச்.26

விவசாய திணைக்களத்தின் அனுசரணையுடன் இளம் விவசாயிகள் இன்று காலை 9 மணியளவில் மரக்கறி பொதி மற்றும் பப்பாசி ,வாழைப்பழங்கள் என்பன பொது மக்களின் வீடுகளுக்குச் சென்று விற்பனை செய்யவுள்ளார்கள் என்று விவசாயத் திணைக்களத்தின் வடமாகாணப் பிரதிப் பணிப்பாளர் சிறிரங்கன் தெரிவித்துள்ளார்.

350ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ள குறித்த மரக்கறிபொதியில் தக்காளி ,கோவா, உருளைக்கிழங்கு, வாழைக்காய், பூசணி, பெரிய வெங்காயம் என்பவற்றில் தலா அரைக்கிலோ வீதம் உள்ளடக்கப்பட்டு,நல்லூர் ,யாழ்பாணம் பிரதேசங்களில் விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# கட்டைக்காட்டில் 3,500 கிலோ பாரை

## மீனவருக்கு அதிர்ஷ்டம்



யாழ்ப்பாணம், மார்ச் 26

கட்டைக்காட்டில் நேற்று 3 ஆயிரத்து 500 கிலோக்கிராம் பாரை மீன்கள் கரைவலையில் அகப்பட்டன.

சில நாள்களாக கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதால் வடமராட்சி கிழக்குத் தொழிலாளர்கள் எவரும் கடற்றொழிலுக்குச் செல்லவில்லை. நேற்றுக் காலை கடற்றொழில் செய்யலாம் என்று அனுமதி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து வடமராட்சி கிழக்கின் அநேகமான இடங்களில் கரைவலைகள் மட்டும்தான் வளைக்கப்பட்டன. இவ்வாறே கட்டைக்காட்டில் ஒருவர் வளைத்த கரைவலையில் 3ஆயிரத்து 500 கிலோவுக்கும் அதிகமான பாரை மீன்கள் அகப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

கட்டைக்காடு மற்றும் அதனை அண்மித்த கிராமங்களிலுள்ள கடற்றொழிலாளர்கள் ஊரடங்குச் சட்டம் காரணமாக கடலுக்கு செல்லாததால் 150க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இணைந்தே கரைவலை வளைத்தனர். அதில் அதிகமாகப் பாரை மீன்கள் சிக்கின. ஊரடங்குச் சட்டம் காரணமாக பிடிக்கப்பட்ட மீன்களை கூடிய விலைக்குச் சந்தைப்படுத்த முடியவில்லை என்றும் கடற்றொழிலாளர்கள் கவலை தெரிவித்தனர்.

(த26, 70,222)

### இளவரசர்...

என்று முன்னதாகவே எச்சரிக்கப்பட்டது. பிரிட்டன் மகாராணியின் அரண்மனை அதிகாரியொருவருக்குக் கொரோனா இருப்பது கண்டறியப்பட்டதால் அரச குடும்பத்தவர்கள் எவருக்காவது கொரோனா அறிகுறி உள்ளதா என்பது தொடர்பில் தற்போது மிகத் துல்லியமாக அவதானிக்கப்படுகின்றது. இந்த நிலையில் ராணி எலிசபெத்தின் மகன் சாள்ஸ்க்கு (வயது 71) கொரோனா இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மார்ச் 12ஆம் திகதி சாள்ஸ் மாகாராணியைச் சந்தித்துள்ளார். எனினும் மகாராணி கொரோனாவால் பாதிக்கப்படவில்லை - என்று அரண்மனைத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. (ம)

### வடக்கில்...

ஏனைய மாவட்டங்களில் இன்று வியாழக்கிழமை காலை 6 மணி வரை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படவுள்ளது.

கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களுக்கு மறு அறிவித்தல் வரை ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்து நாடளாவிய ரீதியில் தொடர்ந்து தடை செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை மீறிய 3 ஆயிரத்து 700 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் நேற்று புதன்கிழமை காலை 6 மணி வரை இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களின் 715 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ஓ,5,22)

### 500...

டுள்ளார்.

இன்று காலை தனியார் தொலைக்காட்சியில் நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் ஒருவரிடம் இருந்து ஏனையவர்களுக்குப் பரவும் விகிதத்தை வைத்தே இந்த எண்ணிக்கை கணக்கிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வைரஸ் தொடர்பாக நாளாந்தம் ஆய்வு நடத்தப்பட வேண்டியது அவசியம் என்று குறிப்பிட்டுள்ள அவர், கொரோனா வைரஸ் தாக்கத்தைக் குறைத்து மதிப்பிட்டமையாலேயே சில மருத்துவர்களும் அதனால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ए)

### யாழ்...

துவ அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அரியாலையில் மதபோதகர் நடத்திய நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள், தாவடியில் கொரோனா தொற்றுக்குள்ளானவருடன் தொடர்பைப் பேணியவர்களுடன் தொடர்பிலிருந்தவர்கள் என்று 10 பேர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த இரண்டு தினங்களும் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் மூன்று பேரின் மருத்துவ அறிக்கைகள் நேற்று முன்தினம் இரவும் எஞ்சியோரின் அறிக்கைகள் நேற்று மதியமும் கிடைக்கப் பெற்றுள்ளன. இவர்களில் எவருக்கும் கொரோனா தொற்று இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ,5)

### கொரோனா தொற்று...

கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களில் மூவர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். தற்போது 99 பேர் கொரோனா நோயுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

255 பேர் வரையில் இந்த நோய்க்கான அறிகுறிகளுடன் தனிமைப்படுத்தப்பட்டு பல்வேறு வைத்தியசாலைகளில் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் எனவும் சுகாதார அமைச்சு மேலும் கூறியுள்ளது. (22)

### கொரோனா பலி...

அதி விரைவாகப் பரவியது. சீனாவில் இருந்து உலகின் 195 நாடுகளில் கொரோனா வைரஸ் தற்போது பல்கிப் பெருகியுள்ளது. குறிப்பாக இத்தாலி, ஸ்பெய்ன் நாடுகள் கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

இத்தாலியில் சுமார் 7 ஆயிரம் பேரும், ஸ்பெய்னில் சுமார் 3 ஆயிரத்து 500 பேரும் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையில் உலக அளவில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 20 ஆயிரமாக அதிகரித்துள்ளது. (ம)

### வதந்தி...

ளார்.

சந்தேகநபரை கொழும்பு பிரதான நீதிவான்ரங்கதிஸாநாயக்க முன்னிலையில் முற்படுத்தியபோது ஏப்ரல் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மஹரகம பகுதியைச் சேர்ந்த 40 வயதான ஒருவரே கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

(ஓ,5,22)

# ஊரடங்குச் சட்டத்தை அரசு நீடிக்க வேண்டும்

## ஜே.வி.பி தலைவர் கோரிக்கை

**கொழும்பு, மார்ச் 26**

**கொரோனா பரவுவதைத் தடுக்க, நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தை இன்னும் சிறிது காலத்துக்கேனும் நீடிக்க வேண்டும். அதை 3 நாள்களுக்கு ஒருமுறை நீக்கி மக்கள் தேவைகளை நிறைவேற்ற இடமளிக்கவேண்டும்.**

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க கோரியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதன்போது நாளாந்த உணவு மற்றும் மருத்துவத்தைப் பெற்றுக் கொள்வதில் பொதுக்கள் சிரமங்களை எதிர்கொள்ளலாம். எனவே ஊரடங்கு சட்ட காலத்தை மூன்று நாள்களுக்கு ஒருமுறை 8 மணித்தியாலங்கள் நீக்கவேண்டும். கொரோனா பரவுவதைத் தடுக்கும் பணிகளை அரசு மட்டும் செய்து முடிக்க முடியாது. இதனை அரசு மட்டும் செய்து முடிக்கக்கூடிய செயற்பாடு அல்ல. ஆனால், இதனை முன்னின்று செய்து முடிக்கும் தலைமைத்துவத்தை அரசு கையில் எடுக்கவேண்டும்.

இதில் பொருளாதார ரீதியிலான, மருத்துவ ரீதியிலான, வயதானவர்கள், சிறுவர் என அனைவரும் நெருக்கடிகளை சந்திக்க நேர்ந்துள்ளது. எனினும் மக்கள் முடிந்தளவு கூட்டம் கூடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

ஊரடங்குச் சட்ட காலத்தில் மக்களுக்கான தேவைகளை முறையாகத் தீர்க்கும் நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்க வேண்டும். வீடுகளுக்குச் சென்று பொருள்களை வழங்கும் நடவடிக்கைகைளைக் கையாள வேண்டும். அவ்வாறான செயற்பாடுகளால் பாதியேனும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். நாளாந்த வேலைகளைச் செய்யும் மக்களின் பொருளாதாரத்தில் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது. சமுர்த்தி பெறும் குடும்பங்கள், வெளிநாடுகளில் வேலை செய்பவர்களின் குடும்பங்கள் என அனைவருக்கும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனை அரசாங்கம் கருத்தில் கொண்டு மாற்று வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டும். என்றார். (து)



# ஜனாதிபதி உத்தரவை மீறிய மதுபானசாலை

யாழ்ப்பாணம், மார்ச் 26

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும்போது மதுபானசாலைகள் திறக்கக் கூடாது என்று ஜனாதிபதி உத்தரவிட்டிருந்த போதும், யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட போது, மதுபானசாலை ஒன்று திறக்கப்பட்டிருந்தது. அங்கு மதுபானம் விற்பனை செய்யப்பட்டது.

யாழ். மாவட்டச் செயலகத்தை அண்மித்த சூழலில் அமைந்துள்ள மதுபானசாலை ஒன்றே திறக்கப்பட்டிருந்தது. அங்கு மதுபான வியாபாரம் நடைபெற்றதால், மதுப்பிரியர்கள் அங்கு குழுமியிருந்தனர்.

எனினும் இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (க-20)

# வடக்கு மாகாணத்தை வலயங்களாக்கவும்

## முன்னாள் மாகாண அமைச்சர் கோரிக்கை

வவுனியா, மார்ச் 26

கொரோனோ வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த, வடக்கு மாகாணம் முழுவதும் சனத்தொகை மற்றும் புவியியல் அமைப்பு சார்ந்து வலயங்களாகப் பிரிக்கப்பட வேண்டும். மக்கள் நலன்சார் நடைமுறைகளை உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் வடக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் அவர் குறிப்பட்டுள்ளதாவது:

கொரோனா வைரஸ் நோயிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு அரசு பல நடவடிக்கைகளை எடுத்துவருவது பாராட்டுக்குரியது.

இலங்கையில் நோய் வந்தபின் காப்பதைவிட வருமுன் காப்பதே புத்திசாலித்தனமானது. ஏனெனில், கொரோனா வைரஸ் நோய்த் தாக்கத்தால் மூச்சுத்திணறல் நிலை ஏற்படுமானால் எமக்குள்ள அவசர சிகிச்சைப் பிரிவுகளின் எண்ணிக்கை, அங்கு கடமையாற்றும் பயிற்றப்பட்ட சுகாதார ஊழியர்கள் எண்ணிக்கை மற்றும் ஏனைய வசதிகள் போதுமானவையா என்பனபற்றிய கேள்வி எழும். பேராபத்தை வெற்றிகரமாக எதிர்கொள்ளலாமா என்ற கேள்வி எழுகிறது. அதற்கு நிச்சயமாக விடைதேட முடியாது என்பதே உண்மை.

எனவே ஆளுநர் சில நடை முறைகளை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

1. வடக்கு மாகாணம் முழுவதும் சனத்தொகை மற்றும் புவியியல் அமைப்பு சார்ந்து வலயங்களாகப் பிரிக்கப்பட வேண்டும்.

2. ஒவ்வொரு வலயங்களிலும் காணப்படும் தனியார் மற்றும் அரச விற்பனை நிலையங்களில் அத்தியாவசிய பொருள்களின் இருப்பை உறுதிப்படுத்த வேண்டும், அதாவது அங்கு வாழும் மக்கள் தொகைக்கேற்ப அத்தியாவசியப் பொருள்களின் கையிருப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

3. ஊரடங்கு தளர்த்தப்படும் வேளைகளில் பொலிஸாரின் உதவியுடன் சம்மந்தப்பட்ட வலயங்களில் வாழும் மக்கள் அந்தந்த வலயங்களிலேயே பொருள் கொள்வனவில் ஈடுபடுவதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

4. அவசர மருத்துவ நிலைகளிலும் ஏனைய அவசர சந்தர்ப்பங்களிலும் மட்டும் குறிப்பிட்ட வலயங்களில் இருந்து மக்கள் வெளியேறுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

இவ்வாறான மக்கள் நலன்சார் நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதால் நோய் பரம்பலை குறிப்பிட்ட வலயத்தினுள் கட்டுப்படுத்துவதுடன் தடுப்பு நடவடிக்கைகளை இலகுபடுத்த முடியும்.

ஊரடங்கு தளர்த்தப்படும் சந்தர்ப்பங்களில் அநாவசியமாக மக்கள் ஒன்றுகூடுவதைக் கட்டுப்படுத்தி நோய் பரம்பலைக் கட்டுப்படுத்தலாம். எனவே மேற்படி விடயங்களை ஆளுநர் கவனத்தில் எடுத்து கொடிய நோயிலிருந்து மக்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றுள்ளது. (த-110)

# பாதிக்கப்பட்ட சகலருக்கும் நிவாரணம் வழங்குக!

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 26

கொரோனா அச்சம் காரணமாக முடங்கிப்போய் இருக்கக்கூடிய கூலி உழைப்பாளர்கள், தினக் கூலி தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் சிறு வியாபாரிகள் போன்றோரின் தினசரி வாழ்க்கை சவால்மிக்கதாக மாறி வருகிறது அரசாங்கம் பல்வேறு நிவாரணங்களை அறிவித்துள்ளது. ஆனால் அந்நிவாரணங்கள் உண்மையாகப் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களையும் சென்றடைய வேண்டும். இவ்வாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியின் தேசிய அமைப்பாளர் வெ.மகேந்திரன் தெரிவித்துள்ளார். (ப)

# கொரோனா தாக்கிய மூன்றாமவரும் நலம்

கொழும்பு, மார்ச் 26

இலங்கையில் கொரோனா (கொவிட்19) வைரஸ் தொற்றுக்கு ஆளானவர்களில் மூன்றாவது நபரும் குணமடைந்து வீடு திரும்பினார் என்று தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்தது.

நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரை 102 பேர் கொரோனா தொற்றுக்கு ஆளாகியுள்ளனர். அவர்களில் மூவரே குணமடைந்துள்ளனர். தற்போது 99 பேர் மருத்துவ சிகிச்சை விடுதிகளில் உள்ளனர். கொரோனா தொற்று உள்ளனர் என்று இன்று எவரும் அடையாளம் காணப்படவில்லை என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

# சனநெரிசலைக் குறைப்பதற்கு தென்மராட்சியில் கலந்தாய்வு

கொடிகாமம் மார்ச் 26

கொரோனாவைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சன நெரிசலைக் குறைப்பதற்கான நடமாடும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான கலந்துரையாடல் ஒன்று சாவகச்சேரியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

சாவகச்சேரிப் பிரதேச சபையின் உபதவிசாளர் செ.மயூரனின் ஏற்பாட்டில், கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரி எதிரிசிங்க தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.



கொரோனாத் தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்காக சனநெருக்கடியைக் குறைக்கும் நோக்கோடு ஊரடங்கு நேரத்தில் எவ்வாறு பொருள்களை விநியோகம் செய்வது, அவசர உலர் உணவு தேவைப்படுவோர்களுக்கான உலர் உணவு வசதிகளை வழங்குவதற்கு வீதியில் சென்று வருவதற்கான அனுமதிகளைப் பெறுவது, வியாபார நடவடிக்கைகளுக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை ப.நோ.கூ. சங்கத்தின் தலைமை அலுவலகத்தின் ஊழியர்களை அழைத்து பொதியிடல் நிறுத்தல் அளவைகள் தொடர்பான விடயங்களை கையாள்வதற்கான அனுமதியை கோருதல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (ஐ-159)

# மீன்பிடி அனுமதிக்கு மன்னாரில் நிபந்தனை!

**மன்னார், மார்ச் 26**
**மன்னார் மாவட்டத்து மீனவர்கள் காலை ஆறுமணியில் இருந்து மாலை ஆறு மணிவரையே கடலில் மீன்பிடியில் ஈடுபட முடியும் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.**

மன்னார் மாவட்டச் செயலகத்தில் மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நேற்றுக் காலை முப்படையினர் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கிடையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே கடற்படையினர் இவ்வாறு தெரிவித்தனர். “கொரோனா ஊரடங்கு வேளையிலும் மன்னார் மாவட்டத்து மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு மீன் பிடியில் ஈடுபடலாம். ஆனால் காலை ஆறு மணிமுதல் மாலை ஆறு மணிவரை கரையில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரம் வரை, படகில் இரண்டு பேர் மட்டுமே சென்று மீன் பிடியில் ஈடுபடவேண்டும். இரவு நேரத்தில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு கடற்படை அதிகாரியின் விசேட அனுமதி பெற வேண்டும். மீனவர்கள் பிடிக்கும் மீன்களை பொலிஸாரின் ஒத்துழைப்புடன் நடமாடும் சேவை மூலம் வியாபாரம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது“ என்றும் அந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ப-213)

## கிருமிநாசினி விசிறல்

அளவெட்டி, மார்ச் 26
வலி.வடக்கு பிரதேச சபையின் சுகாதாரக் குழுவினர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக கிருமிநாசினி விசிறும் பணியை நேற்று முன்தினம் தொடக்கம் ஆரம்பித்துள்ளனர்.
தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை, அளவெட்டி பிரதேச மருத்துவமனை, இளவாலை பிரதேச மருத்துவமனை மற்றும் குரும்பசிட்டி மருந்தகம் ஆகியவற்றுக்கு கிருமிநாசினி விசிறப்பட்டது. (ஐ-36)





## பதுக்கலாளி மீது பாய்ந்தது வழக்கு

வவுனியா, மார்ச் 26
வவுனியா கள்ளிகுளம் பகுதியில் ரின்மீன் மற்றும் பருப்பை பதுக்கிய வியாபார நிலைய உரிமையாளருக்கு எதிராக பாவனையாளர் அதிகாரசபை வழக்குத் தாக்கல் செய்துள்ளது.



கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக சில அத்தியாவசியப் பொருள்களின் விலையை அரசு குறைத்துள்ளது. இந்த நிலையில், அவற்றைப் பதுக்கும் செயற்பாடுகளில் சில வியாபார நிலைய உரிமையாளர்கள் ஈடுபட்டுவருகின்றனர்.
அவற்றைக் கண்காணிக்கும் செயற்பாட்டில் வவுனியா மாவட்ட பாவனையாளர் அதிகார சபையின் பொறுப்பதிகாரி நிலாந்தன் தலைமையிலான குழுவினர் ஈடுபட்ட நிலையில், வவுனியா கள்ளிகுளம் பகுதியில் ஒரு வர்த்தக நிலையத்தில் பொருள்கள் பதுக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது என்று அவர்கள் தெரிவித்தனர். அங்கு அதிகளவான ரின் மீன்கள் மற்றும் பருப்பு ஆகியவை பதுக்கப்பட்டிருந்தன என்று தெரிவித்த அதிகார சபையினர் அந்த வர்த்தக நிலைய உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்று தெரிவித்தனர். இதுதவிர, பண்டாரிக்குளம், திருநாவற்குளம், ஓமந்தை, பட்டாணியூர், கூமாங்குளம் போன்ற பகுதிகளில் அத்தியாவசியப் பொருள்களை அதிகவிலைக்கு விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிராக எச்சரிக்கை விடுக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-110)

## கையுறைகள், சுத்திகரிப்பு திரவம் மாவட்டச் செயலரிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26
50 ஆயிரம் ரூபா கையுறைகள் மற்றும் போத்தல்களில் அடைக்கப்பட்ட கை சுத்திகரிப்புத் திரவங்கள் நேற்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க.மகேசனிடம் கையளிக்கப்பட்டுள்ளன.
கொரோனா வைரஸ் தொற்றுக்களைத் தவிர்ப்பதற்கான தனியார் மற்றும் பொதுத் துறையினரை இணைத்து முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளின் அடிப்படையில் ஆசிய பசுபிக் பிராந்திய இடர் முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழுவின் ஒழுங்கமைப்பில் கிருபா லேணர்ஸ் தலைவர் அ.கிருபாகரனின் பங்களிப்பில் இவை வழங்கப்பட்டுள்ளன. இவற்றைக் கையளிக்கும் நிகழ்வில் இடர் முகாமைத்துவ யாழ் மாவட்ட உதவிப் பணிப்பாளர் என். சூரியராஜா, ஆசிய பசுபிக் பிராந்திய இடர் முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழு மாவட்ட உத்தியோகத்தர் பி. எக்ஸ். கலீஸ், கிருபா லேணர்ஸ் தலைவர் அ. கிருபாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.
இந்தச் செயற்பாட்டை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் வரவேற்றதுடன், பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் முன்னின்று பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கும், தேவை கருதிய மக்களுக்கும் இவை பகிர்ந்து வழங்கப்படும் என்றும் தெரிவித்தார். (எ)







## வறுமைக்குட்பட்ட மக்களுக்கு உலருணவு பொருள்கள் வழங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 26
தற்போதை அசாதாரண சூழ்நிலையினை கருத்தில் கொண்டு நாளாந்த வாழ்க்கையை நடத்திச் செல்ல குறைந்த வருமானத்தைக் கொண்ட குடும்பங்களுக்கான உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. கருகம்பனை தமிழ் மன்றம், சனசமூக நிலையம், இந்து இளைஞர் கழகம், இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் இணைந்து இந்தப் பொருள்களை வழங்கியுள்ளன.
இளவாலை வடக்கு கிராம அலுவலர் பிரிவு கிராமங்களான, நாதோலை, மணலடைப்பு, காடிவளை, மயிலங்கூடல், கருகம்பனை ஆகியவற்றுக்கும், வித்தகபுரம் கிராம அலுவலர் பிரிவி, நவக்கிரி, விழிசிட்டி, கயந்தப்பை, மயிலங்கூடல், கருகம்பனை ஆகியவற்றுக்கும், நகுலேஸ்வரம் கிராம அலுவலர் பிரிவில் கருகம்பனை, இலந்தகட்டி ஆகியவற்றுக்கும், இளவாலை வடமேற்கு கிராம அலுவலர் பிரிவில் கருகம்பனைக்கும் நிவாரணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
மேலும் வலிகாமம் வடக்கில் ஏனைய கிராம அலுவலர் பிரிவுகளில் மிகவும் அவசரமாக உதவி தேவைப்படுபவர்கள் இருப்பின் 0777279205 (பவன்), 0773241755 (லக்சன்) என்ற அலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ-222)

# முல்லையில் மீன்பிடிக்க இராணுவத்தினர் இடையூறு

## மீனவர்கள் குற்றச்சாட்டு



**முல்லைத்தீவு, மார்ச் 26**
**முல்லைத்தீவு சிலாவத்தை தியோகுநகர் பகுதியில் நேற்று மீன்பிடியில் ஈடுபட்டிருந்த பிரதேச மீனவர்களை இராணுவத்தினர் தடுத்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.**

அந்தப் பகுதியில் நூற்றுக்கண க்கான ஏக்கர் நிலத்தில் ஹொட்டல் ஒன்றை அமைத்துவரும் கன டாவை சேர்ந்த தமிழர் ஒருவருக்கு சொந்தமான தனியார் நிறுவனத்தி னரே இராணுவத்தினர் மூலமாக தங்களை அச்சுறுத்தி தொழில் நட வடிக்கையை தடுத்தனர் என்றும் மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இந்த இடத்தில் மீனவர்களுக்கும் குறித்த தனியார் நிறுவனத்தி னருக் கும் இடையே முரண்பாடு ஏற்பட்டு, அது நீதிமன்றம் வரை சென்று விசா ரணையில் உள்ளது.

இந்த நிலையில், நேற்று இராணு வத்தினர் தடை ஏற்படுத்தினர் என்று மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். கொரோனா பீதிக்குப் பின்னர் நீண் டநாள்களின் பின்னர் நேற்று கரை வலை மூலம் மீன்பிடியில் ஈடுபட்டி ருந்த தங்களை இங்கு முகாம் அமைத்துள்ள படையினர் தடுத்த னர் என்று தெரிவித்தனர்.

இந்த நிலைமையை அடுத்து அந் தப் பகுதிக்கு வந்த முல்லைத்தீவு பொலிஸார் மீனவர்களிடம் தொழில் செய்வதற்கான அனுமதி பத்திரம் போன்றவற்றை பார்வையிட்டு தொழிலில் ஈடுபடுவதை அனுமதித் தனர்.

தாங்கள் இந்தப் பகுதியில் தடை யின்றி மீன்பிடியில் ஈடுபட அந்தத் தனியார் நிறுவனத்தின் அடாவ டியை நிறுத்தவேண்டும் என்பது அந்தப் பகுதி மீனவர்களின் கோரிக் கையாகவுள்ளது. (த)

# வீடு தேடிச் செல்லும் மருத்துவக் குழுவினர்



முல்லைத்தீவு,மார்ச் 26
முல்லைத்தீவு பிரதேச வைத்தியசாலையினர் நடமாடும் சேவையூடாக கிராமங்களுக்குச் சென்று மருத்துவ சேவையை வழங்கி வரு கின்றனர்.

முல்லைத்தீவு பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி திரு மதி நிரோசினி திலீபன் தலைமையில் வைத்தியர் நிரோசா சிரேஸ்ட தாதியர் சுகிந்தன், மருந்தாளர், பணியாளர்கள், வாகன சாரதி ஆகியோர், வைத்தி யசாலையில் மாதாந்த கிளினிக் பெறுவோருக்கு நடமாடும் சேவையை வழங்கி வருகின்றனர்.

ஒவ்வொருவருடைய வீட்டு வாசலிலும், அவர்க ளைப் பரிசோதித்து அவர் களுக்குரிய மருந்து களை வழங்கி வருகின்ற னர். மருத்துவத் தேவை நிமித்தம் செல்லும் ஏனைய நோயாளிகளுக் கும் மருந்துகளை வழங்கி வருகின்றனர்.

உண்ணாப்பிளவு, கள் ளப்பாடு வடக்கு, கள்ளப் பாடு தெற்கு, வண்ணாங் குளம், மணற்குடியிருப்பு, முல்லைத்தீவு நகரம், கரைச்சிகுடியிருப்பு, செல் வபுரம், முள்ளிவாய்க்கால் கிழக்கு ஆகிய கிராமங்களுக்கு மருத் துவ சேவை வழங்கப்ப டும்.

உண்ணாப்புலவு, கள்ளப் பாடு வடக்கு, கள்ளப்பாடு தெற்கு, ஆகிய கிராமங்க ளுக்கு நேற்று நேரடியா கச் சென்று மருத்துவ சேவையை வழங்கினர். ஏனைய கிராமங்க ளுக் குத் தொடர்ந்து மருத்துவ சேவை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது. (க19)

# கடனை செலுத்த அவகாசம் கேட்கும் கோத்தா

கொழும்பு, மார்ச் 26
கொரோனா நோய்த் தொற்று அச்சுறுத்த லுக்கு உள்ளாகக்கூடிய அதிக இடர்நிலைமை உள்ள அபிவிருத்திய டைந்து வரும் நாடுகள் சர்வதேச நிதி நிறுவ னங்களிடம் பெற்றுக் கொண்டுள்ள கடனை திருப்பிச் செலுத்துவ தற்கு நிவாரணக் காலத்தை அல்லது கடனை பிற்போடும் வசதியை அளிக்குமாறு ஜனாதிபதி கோத்தாபய கோரிக்கை விடுத்து ள்ளார். பல்தரப்பு, இருதரப்பு உதவி முகவர் நிறுவனங்க ளுக்கு இந்த கோரிக் கையை முன்வைக்கு மாறு ஜனாதிபதி உலக சுகாதார நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தி டம் கேட்டுக்கொண் டுள்ளார்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு கொவிட் 19 சமூக இடைவெளி, பொதுமக் கள் சுகாதார, சமூக பாதுகாப்பு முறை மையை முகாமை த்துவம் செய்வதற்கு இந்த நிவாரணம் உதவும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (ஒ.5)

# சமூக ஊடகங்களில் போலிப்பிரசாரங்கள்

## சட்ட நடவடிக்கை மேற்கொள்ள மஹிந்த ராஜபக்ச முடிவு

கொழும்பு, மார்ச்.26
அரசாங்கம் வழங்கும் நிவாரணங்கள் தொடர்பாக போலியான பிரசாரங்களை சமூக ஊடகங்களில் மேற்கொள்ள வேண்டாம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்

கொவிட் 19 வைரஸ் பரவுவதைக் கட்டுப் படுத்துவதுடன், மக்களுக்கு அத்தியாவ சியமான நுகர்வுப் பொருட்களை வழங் குவதற்கு அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட் டம் தொடர்பாக போலி யான தகவல்களை சமூ கமயப்படுத்துவோருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள் வது தொடர்பாக கவ னஞ் செலுத்தப்பட்டுள் ளது.



பொறுப்பான அரசாங் கம் என்ற வகையில் மக்களின் நலனுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள சில தீர்மானங்கள் தொடர்பாக போலியான தகவல்கள் சமூக ஊடகங்கள் மூலம் பிரசாரம் செய் யப்படுவதன் காரணமாக இத்தீர்மா னத்தை பிரதமர் மேற்கொண்டுள்ளார்.

அத்தியாவசிய நுகர்வுப் பொருட்கள் உள்ளடங்கிய நிவாரணங்களை மக்க ளுக்கு வழங்குவது உட்பட பிரதமர் மேற்கொண்டுள்ள தீர்மானங்களை வேண்டுமென்றே போலியான முறை யில் சமூகமயப்படுத்தும் வேலைத்திட்ட மொன்று செயற்படுத்தப்படுவதாகத் தெரிகிறது.

நிதியாற்றல் உள்ள, இல்லாத அனைவ ரும் கொரோனா அனர்த்தம் காரண மாக உடலரீதியாகவும், உளரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ள இவ்வாறான சந்தர்ப் பத்தில் அரசியல் தேவைகளுக்காக கீழ்த்தரமான முறையில் இவ்வாறான போலியான தகவல்களை சமூகமயப்ப டுத்துவதனைக் கண்டிக்கிறேன்.

இவ்வாறு போலியான தகவல்களை சமூகமயப்படுத்துவது தொடர்பாக பிரத மரின் சட்டத்தரணிகள் கொழும்பு குற்ற வியல் பிரிவுக்கு நேற்று 25 ஆம் திகதி முறைப்பாடொன்றைச் சமர்ப்பித்தனர்.

கட்சி, நிற பேதமின்றி நாட்டு மக்கள் அனைவரும் ஆபத்தை எதிர்நோக்கி யுள்ள சந்தர்ப்பத்தில் போலியான தக வல்களை சமூகமயப்படுத்தி அரசாங்கத் தின் முயற்சியை குறைகூறுவதற்குப் பதிலாக அரசாங்கத்தின் இந்த வேலைத் திட்டத்தை சிறப்பாக முன்னெடுக்க உதவி வழங்குமாறு அரசாங்கம் அனைத்து சமூக ஊடகங்களிடமும் வேண்டிக்கொள்கிறோம் என்றுள்ளது. (அ)

# 142 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதி




தெல்லிப்பழை, மார்ச் 26
விது நம்பிக்கை நிதியத்தின் அனுசரணையில் 142 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப் பட்டன.

கொரோனா வைரஸ் தாக்கத்தால், மக்களின் பாது காப்புக் கருதி அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத் தால் நாளாந்த வருமானம் பெறும் மக்களின் வாழ் வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

அதனால், தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில், பிரதேச செயலாளரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ், கிராம சேவகர்களின் உதவியுடன் இனம் காணப்பட்ட 142 குடும்பங்களுக்கு இந்த உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டன. (க)

## சந்தா அறிவிடாதிருக்க முடிவு

கொழும்பு, மார்ச் 26
பெருந்தோட்டத் தொழிலாளர்களிடமிருந்து மார்ச் மாதத்துக்கான சந்தாவை அறவிடாமல் இருப்பதற்கு தமது தொழிற்சங்கம் தீர்மானித்துள்ளது என இலங் கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், அமைச் சருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

அரிசி, மாவு, பருப்பு உட்பட 6 பொருட்கள் அடங்கிய நிவாரணப்பொதி, தோட்டத்திலுள்ள அனைத்து குடும் பங்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

# இத்தாலியால் சட்டவிரோதமாக திரும்பியோரே தலைமறைவாம்

## புதுக்கதை விடுகிறார் உதய கம்மன்பில

*கொழும்பு, மார்ச் 26*

*படகுகளில் திருட்டுத்தனமாக இத்தாலி சென்று போலி கடவுச் சீட்டுக்களின் ஊடாக மீண்டும் நாட்டுக்குத் திரும்பியவர்கள்தான் 'கொரோனா தனிமைப்படுத்தலுக்கு' வராமல் மறைந்து வாழ்கின்றனர் என்று அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.*

அவ்வாறானவர்கள் பயப்பட வேண்டாம். பொலிஸார் அந்த விவரங்கள் பற்றி ஆராயப்போவதில்லை. அவர்களுக்கு கொரோனா ஏற்பட்டுள்ளதா என்று மாத்திரமே தேடிப் பார்ப்பார்கள் என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

மருத்துவத் துறையில் உலகில் இரண்டாமிடத்தில் இருக்கும் இத்தாலியே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. மக்களின் ஒத்துழைப்பின்மையே இதற்குக் காரணம். இத்தாலிக்கே இந்த நிலைமை என்றால் எமது நிலைமையைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. மக்கள் ஒத்துழைத்தால் மாத்திரமே இதைக் கட்டுப்படுத்த முடியும்.

வெளிநாடுகளில் இருந்து வந்தவர்களின் ஊடாகவே இந்த வைரஸ் எமது நாட்டுக்குப் பரவியுள்ளது. இதனால்தான் இவ்வாறவர்களை நாம் தனிமைப்படுத்தி வருகிறோம். ஆனால், இன்னும் சிலர் தனிமைப்படுத்தலுக்கு வராமல் மறைந்து வாழ்கிறார்கள்.

மிகவும் ஆபத்தான ஏனையவர்களுக்கும் பரவக்கூடிய உயிர் கொல்லிநோயில் இருந்து தம்மைப் பாதுகாப்பதற்கே எவரும் முன்வருவர். ஆனால், இவர்கள் எதோ குற்றச்செயல்கள் செய்தவர்கள்போல் மறைந்து வாழ்கிறார்கள். எங்களுக்கு அதிசயமாக உள்ளது.

இது பற்றித் தேடிப் பார்த்தபோது ஓர் உண்மை வெளிவந்துள்ளது. இவர்கள் படகுகளில் திருட்டுத்தனமாக இத்தாலி சென்று போலிக் கடவுச் சீட்டுக்களின் ஊடாக மீண்டும் நாட்டுக்குத்திரும்பியவர்கள் என்பது தெரியவந்தது.

தாங்கள் கைது செய்யப்படுவோம் என்ற அச்சம் காரணமாகவே இவ்வாறு மறைந்து வாழ்கிறார்கள். பொலிஸார் இதைப்பற்றியெல்லாம் தேடமாட்டார்கள். அவர்கள் திருட்டுத்தனமாகப் போனார்களா, திருட்டுத்தனமாக வந்தார்களா போன்ற விடயங்கள் எவையும் பொலிஸாருக்குத் தேவையில்லை.

அவர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதா இல்லையா என்று மாத்திரமே தேடிப் பார்ப்பார்கள். நான் இவ்வாறானவர்களுக்கு உத்தரவாதம் அளிக்கிறேன். அவர்கள் அஞ்சுவது போன்று எதுவும் நடக்காது. தயவு செய்து உங்களை சோதித்துப் பார்ப்பதற்கு முன்வாருங்கள்.

நான் உத்தரவாதமளிக்கிறேன். உங்களது வெளிநாட்டுப் பயணம் பற்றி எதுவும் தேடப்படாது. நீங்கள் எப்படிப் பயணம் செய்தீர்கள்? எப்படி வந்தீர்கள் என்பது பற்றி இப்போது எவருக்கும் முக்கியமில்லை. ஆகவே, பயப்படாது தயவு செய்து வெளியே வாருங்கள் - என்றார். (ஒ,5)

# குடும்பஸ்தர் தற்கொலை!

புதுக்குடியிருப்பு,மார்ச் 26

புதுக்குடியிருப்பு திம்புலிப்பகுதியில் 27 வயதுடைய இளம் குடும்பஸ்தர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

திம்புலி பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தரே இவ்வாறு தவறான முடிவெடுத்து தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றது.

சம்பவ இடத்துக்கு சென்ற புதுக்குடியிருப்பு பொலிஸார் உடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளதுடன், உயிரிழப்பு தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-19)

# வவுனியாவில் 137 பேர் சுய தனிமைப்படுத்தலில்!

வவுனியா,மார்ச் 26

கொரனா வைரஸ் தாக்கத்தால், பாதிக்கப்பட்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் 137 பேர் வவுனியாவில் சுயதனிமைபடுத்தப்பட்டுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொரோனா தொற்று ஏற்பட்டிருக்காலம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் வருகை தந்த 208 பேரில் 137 பேரே இது வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களில் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 104 பேரும், செட்டிகுளம் பிரிவில் 17 பேரும், வவுனியா வடக்கில் 8 பேரும், யாழில் இடம்பெற்ற ஆராதனையில் கலந்துகொண்ட 8 பேரும் உள்ளடங்குகின்றனர் இதனைவிட வெளிநாட்டிலிருந்து வருகை தந்த விமானப் பயணிகள் 538 பேர் வவுனியா மாவட்டத்தில் 14 நாள்கள் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதனடிப்படையில் வவுனியா பம்பைமடு இராணுவ முகாமில் 212 பேரும், பெரியகட்டு இராணுவமுகாமில் 120 பேரும், பூவரசங்குளத்தில் 206 பேரும் என 538 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ப-110)

### கொழும்பில் பொருள்களை ஏற்ற

# லொறி உரிமையாளர்கள் 7 பேர் விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,மார்ச் 26

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் பொருள்களை ஏற்றிவருவதற்கான அனுமதிக்கு, 7 பாரவூர்திகளின் உரிமையாளர்கள் விண்ணப்பித்துள்ளனர் என்று யாழ்ப்பாணம் பிரதேச செயலர் எஸ். சுதர்சன் தெரிவித்தார்.

நாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள நிலையில் யாழ்ப்பாணத்துக்கான அத்தியாவசியப் பொருள்களை கொழும்பிலிருந்து ஏற்றுவதற்கு பாஸ் அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம் மற்றும் யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் மேற்கொண்ட முயற்சியின் பயனாக புதிய நடைமுறை பின்பற்றப்படஉள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதற்கமைவாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் சென்று அத்தியாவசியப் பொருள்களை ஏற்றி வருவதற்கான ஊரடங்கு பாஸ் அனுமதியை, பொலிஸ் நிலையங்களில் சென்று பெறாது, யாழ்ப்பாண பிரதேச செயலரிடம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமிடத்து, உரிய அனுமதி பெற்றுத் தரப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் மட்டும் 7 பாரவூர்திகளின் உரிமையாளர்கள் இந்த அனுமதிக்காக விண்ணப்பித்துள்ளனர் என்று யாழ்ப்பாணம் பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (க-111)

# மக்கள் முண்டியடிப்பதை தடுப்பதற்கு ஆலோசனை!

### முன்வைக்கிறார் மருத்துவர் காண்டீபன்

யாழ்ப்பாணம், மார்ச் 26

கொரோனா தொற்றைத் தடுப்பதற்கு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் நீக்க ப்படும் போது மக்கள் பெருமளவில் ஒன்று கூடுவதால், ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்திய தன் நோக்கமே தவறாகப் போய்விடும். மக்கள் கூட்டம் கூடுவதைத் தவிர்ப்பதற்கு சில நடைமுறை ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் மருத்துவர் தா. காண்டீபன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்ப்பாணம் 5 வலயங்களாகப் பிரிக்கப்பட வேண்டும். தீவகம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, யாழ்ப்பாண மாநகரம் என்று அவை பிரிக்கப்பட வேண்டும். ஊரடங்கு ஒவ்வொரு பிரதேசத்துக்கும் வேறு வேறு நேரங்களில் தளர்த்தப்பட வேண்டும். அத்தியாவசியப் பணியாளர்கள் தவிர்ந்த ஏனையோர் ஒரு பிரதேசத்திலிருந்து இன்னொரு பிரதேசத்துக்குச் செல்வது தடை செய்யப்பட வேண்டும்.

வீட்டுக்கு வீடு பொருள்களை வழங்கும் நடைமுறை ஆரம்பிக்கப்பட வேண்டும். ஒரு கிராம அலுவலர் பிரிவிலிருந்து இன்னொரு பிரிவுக்கு பொருள்கள் வாங்கச் செல்லும் நிலையும் இயன்றவரை தவிர்க்கப்பட வேண்டும்.

மேலும் ஊரடங்குச் சட்டம் ஒரு வாரத்துக்கு தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் - என்றார். (ஒ,5)

### ஊரடங்கு வேளையில்,

# பொருள்களை விநியோகிக்க அனுமதிப்பத்திரம் தேவையில்லை

வவுனியா,மார்ச் 26

அத்தியாவசியப் பொருள்களை விநியோகிப்பதற்கு ஊரடங்குச் சட்ட அனுமதிப் பத்திரம் தேவையில்லை என்று வவுனியா மாவட்டச் செயலர் சமன் பந்துல சேன தெரிவித்தார்.

வவுனியா, பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஊரடங்குச் சட்ட காலத்தில் மக்களுக்குத் தேவையான அத்தியவசியப் பொருள்களை விநியோகம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் ஊரடங்கு அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளத் தேவையில்லை என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. இச்சேவையில் ஈடுபடுபவர்கள் தங்களுடைய வாகனத்திலே அத்தியாவசிய சேவை என மூன்று மொழிகளிலும் எழுதி சுகாதாரப்பிரிவினரால் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளுக்கு அமைவாக பொருள்களை விநியோகிக்க முடியும்.

அத்தோடு சமுர்த்தி பயனாளிகள் ஆறுமாதத்துக்குப் பின்னர் செலுத்தக்கூடிய வகையிலே பத்தாயிரம் ரூபாவை வட்டியின்றிய கடனாக சமுர்த்தி வங்கிகளில் பெற்றுக்கொள்ள முடியும். வரும் வெள்ளிக்கிழமையில் இருந்து கடனை இரண்டு கட்டமாக வழங்குவதற்கு வவுனியா மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார் - என்றார். (ப-110)

# இத்தாலியில் இலங்கையர் எண்மருக்கு கொரோனா

ரோம், மார்ச் 26


இத்தாலியில் வசிக்கும் 8 இலங்கையர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி இருப்பது இனங்காணப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தாலியில் இருந்து இலங்கை திரும்பியவர்களே அதிகளவில் கொரோனா தொற்றுக்கு இலக்காகியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

# கற்பனை கலந்த பதிவு

■ கற்பனை: சனத்

# நல்லாட்சியில் 'கொரோனா' வந்திருந்தால்!



## மைத்திரி என்ன செய்திருப்பார்?

பத்திரிகை செய்திகளை பார்த்த பின்னரே 'கொரோனா' வைரஸ் பற்றி அறிந்திருப்பார்.

'கொரோனா' வைரஸ் வேகமாக பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக உடனடியாக சமூகவலைத்தளங்கள் முடக்கப்பட்டிருக்கும்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி திறந்த பொருளாதாரக் கொள்கையை கடைப்பிடிப்பதாலேயே 'கொரோனா' நாட்டுக்குள் ஊடுருவியது என பொங்கியெழுந்து சொற்கணை தொடுத்திருப்பார்.

சர்வமதக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்து, கொரோனா வைரஸ் ஒழிப்பு குறித்து 'ஆன்மீக' ஆலோசனை கேட்டிருப்பார்.

அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்காக சுதந்திரக்கட்சியின் மத்தியசெயற்குழு கூட்டத்துக்கு அழைப்பு விடுத்திருக்கலாம்.





## விமல் வீரவன்ச
(நாடாளுமன்றில் உரை)

வடக்கை இவ்வாறு தனிமைப்படுத்தினால் அது தனி ஈழம் தொடர்பான சிந்தனையை மக்கள் மத்தியில் விதைத்துவிடும்.

இத்தாலியில் வாழும் புலம்பெயர் தமிழர்கள்கூட இதன் பின்னணியில் இருக்கலாம். மதபோதகரை நாட்டுக்குள் அனுமதித்தது யார்?

வெளிநாட்டு மருத்துவர்களை நாட்டுக்குள் அனுமதிக்கக்கூடாது. அவ்வாறு அனுமதிப்பது நாட்டின் சுயாதீனத்தன்மைக்கு அச்சுறுத்தல்.

கண்ணுக்கு தெரியாத ஒரு வைரஸைக் கூட கட்டுப்படுத்த முடியாத இந்த அரசாங்கத்தை நாட்டு மக்கள் விரட்ட வேண்டும்.

30 வருடகால போரை முடித்த ராஜபக்ச இதனை மூன்றே நாட்களில் செய்திருப்பார்.

## ஆளுங்கட்சியில் இருந்த மலையக தலைவர்கள்
(ஊடக அறிக்கை)

"80 வருடங்கள் அரசியல் நடத்துபவர்கள் 'கொரோனா'வை கட்டுப்படுத்த பாதுகாப்பு வேலி அமைத்தார்களா?

நாங்கள் ஆட்சிக்குவந்த பின்னரே சந்தா பற்றி மட்டும் சிந்திக்காமல் சமூக மாற்றத்திலும் அக்கறை செலுத்தப்பட்டது.

ஆளுங்கட்சியின் பங்காளிகளாக இருந்தாலும் நாம் ஆமாம் சாமி போடமாட்டோம்.

எமது மக்களுக்கு நிவாரணம் இல்லாவிட்டால் நிச்சயம் பதவிகளை துறப்போம். எதிர்வரும் 10 ஆம் திகதி கூடும் மத்தியகுழு கூட்டத்தில் இது பற்றி இறுதி முடிவெடுக்கப்படும்"

(பின்னர் கூட்டம் ஒத்திவைக்கப்படுவது வேறுகதை.)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
(உரை)



'கொவிட் 19' என்ற சொற்பதத்தில் தெளிவின்மை இருக்கின்றது. எனவே, இவ்வைரஸ் 'மஹாமாரி' என அழைக்கப்பட வேண்டும் என்ற ஆலோசனையை முன்வைக்கின்றோம். மக்கள் மத்தியில் வைரஸ் பரவுவதை தடுப்பதற்காக இராணுவத்தை முகாமுக்குள் முடங்கச் சொல்லவும்.

எமது மக்களின் காணிகளை விடுவித்திருந்தால் அவர்கள் தற்பாதுகாப்புடன் வாழ்வதற்கான சூழல் உருவாகியிருக்கும். இதனை அரசாங்கம் செய்யவில்லை.

வடக்கு மட்டும் ஏன் முழுமையாக முடக்கப்பட வேண்டும். இது ஒடுக்குமுறையின் உச்சக் கட்டம். எம்முடைய மென்வலுவைப் பிரயோகித்தாலே கொரோனாவைக் கட்டுப்படுத்தியிருக்கலாம். எப்படியும் அடுத்த தீபாவளிக்குள் கொரோனாவுக்குத் தீர்வு எட்டப்படும்.

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
(ஊடக மையத்தில் உரை)

பூகோள அரசியலைச் சரியாக விளங்கிக் கொள்ளாததாலேயே இந்தக் கொரோனா வைரஸ் இலங்கைக்குள் நுழைய முடிந்தது. ஐ.நா சபையிலே இந்த விடயத்தைக் கொண்டு செல்லப்போகிறோம். ஆனால் கூட்டமைப்பு இதற்கு முட்டுக்கட்டையாக இருப்பதோடு, கொரோனாவைப் பற்றி மக்களைத் தவறாக வழி நடத்துகின்றது. இன்றைக்கு கொரோனா கட்டுப்பாட்டுக்குள் இல்லாமைக்கு முழுப்பொறுப்பையும் கூட்டமைப்பே ஏற்கவேண்டும். நாம் சொன்னது போல ஒரு நாடு இரு தேசம் என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டிருந்தால், இலங்கைக்கு மட்டுமே இந்த நோய் வந்திருக்கும். எமது தேசத்துக்கு வர விட்டிருக்கோம். ஆகவே எமக்கும் ஒரு சந்தர்ப்பம் தாருங்கள்.



# உண்மையான குற்றவாளி ரணில்தான்!

ஜே.வி.பியின் முன்னாள் எம்பி **விஜித ஹேரத்** சிங்கள நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியின் தமிழாக்கம் இது.

நாடாளுமன்றில் இன்று எதிர்க்கட்சியின் பொறுப்பைச் சரியாக நிறைவேற்றி வருவது ஜே.வி.பிதான் என்று முழு நாட்டுக்குமே தெரியும். மக்கள் எம்மிடம் ஒரு பொறுப்பை வழங்கினால் அதை நாம் சரியாகச் செய்ய வேண்டும். அதையே நாம் செய்கிறோம்.

■ தமிழாக்கம்: எம்.ஐ.முபாறக்

**கேள்வி: மத்திய வங்கி ஊழலுக்கு எதிராக இந்த அரசு எடுத்து வரும் நடவடிக்கை போதுமானதா?**

**பதில்:** ஒருபோதும் இல்லை. உண்மையான நேரடிக் குற்றவாளியை விட்டுவிட்டு அந்தக் குற்றச் செயலின் பங்காளிகளையே தேடுகிறார்கள். உண்மையான குற்றவாளி ரணில் விக்ரமசிங்கதான். அவருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படவில்லை. அவரைப் பாதுகாத்துக்கொண்டு ஏனையவர்களை பிடிப்பதற்கே இந்த அரசு முயற்சி செய்கிறது.

ரவி கருணாநாயக்க மற்றும் அர்ஜுன மஹேந்திரன் போன்றவர்கள் இந்த ஊழலின் பங்காளிகள்தான். பிரதான குற்றவாளி ரணில். அவரை மஹிந்த பாதுகாக்கிறார். ரணில்-மஹிந்த உறவு இதன் மூலம் தெளிவாகத் தெரிகிறது. இந்த உறவின் காரணமாகவே மஹிந்த ஆட்சியின் குற்றவாளிகளை ரணில் தண்டிக்கவில்லை. இதற்கு நன்றி செலுத்தும் வகையில் மஹிந்த இப்போது ரணிலைக் காப்பாற்றுகிறார்.

**கே: தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியைக் கைப்பற்றும் திட்டம் எதுவும் ஜே.வி.பிக்கு உண்டா?**

**ப** நாடாளுமன்றில் இன்று எதிர்க்கட்சியின் பொறுப்பைச் சரியாக நிறைவேற்றி வருவது ஜே.வி.பிதான் என்று முழு நாட்டுக்குமே தெரியும். மக்கள் எம்மிடம் ஒரு பொறுப்பை வழங்கினால் அதை நாம் சரியாகச் செய்ய வேண்டும். அதையே நாம் செய்கிறோம். நாம் சிறிய கட்சிதான். ஆனால், நாம் செய்யும் பணிகள் விசாலமானவை. கடுகு சிறிது என்றாலும் காரம் பெரிது அல்லவா. அதை நாம் நிரூபித்துக் காட்டியுள்ளோம். இதனால் பொறுப்புக்களை சரிவர நிறைவேற்றக்கூடிய எம்பிக்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்புமாறு நாம் மக்களிடம் கேட்டுக்கொள்கிறோம். இந்தப் பொறுப்பை மக்கள் சரியாக நிறைவேற்றினால் எல்லாமே நல்லதாகவே நடக்கும். நாட்டுக்கு நல்லது நடக்கும். எமது வேட்பாளர் பட்டியலில் திருடர்கள், ஊழல்வாதிகள், பாலியல் வல்லுறவில் ஈடுபட்டவர்கள், அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தவர்கள் போன்றோர் இல்லை என்பதை மக்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**கே: ஏனைய கட்சிகளின் வேட்பாளர் பட்டியலில் சினிமா நட்சத்திரங்கள் அதிகமாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். உங்களது பட்டியலில் அவ்வாறானவர்கள் உள்ளார்களா?**

**ப** அந்தக் கட்சிகளுக்கும் எமது கட்சிகளுக்கும் இடையில் அதிகமான வித்தியாசங்கள் உள்ளன. பிரபல்யமான விடயங்களுக்குப் பின்னால் செல்பவர்கள் அல்லர் நாங்கள். கொள்கையில் உறுதியாக இருப்பவர்களே எமது கட்சியில் இருக்கிறார்கள். ஏனைய கட்சிகளில் போட்டியிடுபவர்களின் பெயர்களுக்குப் பின்னால் விசேட பட்டப் பெயர்கள் இருக்கும். குடு வியாபாரிகள், மண் வியாபாரிகள், சூது விளையாடுபவர்கள், பந்தயசாலை நடத்துபவர்கள், சாராய வியாபாரிகள், சினிமா நட்சத்திரங்கள் எனப் பலர் அங்கு இருப்பர். எமது கட்சியில் வேட்பாளர் பட்டியலில் அவ்வாறானவர்கள் இல்லை. எமது கட்சியில் நல்ல கலைஞர்கள் உள்ளார்கள். அவர்கள் நல்லமுறையில் எமக்கு ஆதரவு வழங்குகிறார்கள்.

**கே: நீங்கள் போட்டியிடும் கம்பஹா மாவட்டத்தில் உங்களது வெற்றி வாய்ப்பு எப்படி உள்ளது?**

**ப** கம்பஹாவில் 20 வருடங்களாக அரசியல் செய்கிறேன். 2000, 2001, 2004, 2010 மற்றும் 2015 ஆகிய தேர்தல்களில் தொடர்ச்சியாக வெற்றி பெற்றுள்ளேன். தூய்மையான அரசியல் என்றால் என்னவென்று நாங்கள் நிரூபித்துக் காட்டியுள்ளோம். இதனால் எம்மீது நம்பிக்கை வைத்து அவர்கள் தொடர்ச்சியாக என்னை வெற்றிபெறச் செய்து வருகிறார்கள். இந்த முறையும் கம்பஹாவின் குரலாக அவர்கள் என்னை நாடாளுமன்றம் அனுப்புவார்கள் என்று நான் நம்புகிறேன். எமக்கு வாக்களித்த கம்பஹா மக்களுக்கு நாம் ஒருபோதும் துரோகம் செய்தது கிடையாது. அவர்கள் பெருமைப்படும் வகையில் நாம் அரசியல் செய்து வருகிறோம். அந்த மாவட்டத்தில் என்னைவிட சிரேஷ்ட அரசியல்வாதியாக இருப்பவர் ஜோன் அமரதுங்க மாத்திரமே. ஏனையவர்கள் அனைவரும் பிறகு வந்தவர்கள்தான். கம்பஹா மக்கள் எம்மீது நம்பிக்கை வைத்துள்ளார்கள். அவர்களின் நம்பிக்கையை இந்த முறையும் நாம் நிறைவேற்றுவோம்.


விஜித ஹேரத்

**கே: கடந்த தேர்தலில் கம்பஹாவில் ஜேவிபி சார்பில் நீங்கள் மாத்திரமே வெற்றி பெற்றீர்கள். இந்த முறை இன்னொரு ஆசனத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமா?**

**ப** எமது பொறுப்பை நாம் சரியாக நிறைவேற்றி வருகிறோம். மக்கள் அதை உணர்ந்து எமது பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க விரும்பினால் நல்லது.

**கே: ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளும் இருக்கின்ற பிரச்சினைகள் காரணமாக மிதப்பு வாக்குகளைக் கவரும் வேலைத் திட்டங்களை ஜே.வி.பி செய்யுமா?**

**ப** நாம் எல்லா வாக்காளர்களிடமும் பேசுகிறோம். ஜேவிபியின் கொள்கையை செயற்பாடுகளை பார்க்குமாறு கூறுகிறோம். மேற்படி அந்த இரு கட்சிகளின் அரசியலும் முடிவுக்கு வரும் நிலையில் உள்ளது. அதிகாரப் போட்டியே இதற்கு முக்கிய காரணம். இதுமாதிரி விடயங்கள் கட்சி ஆதரவாளர்களுக்கு முக்கியமில்லை.

இந்தக் கட்சிகளின் விசுவாசிகளாக இருந்தவர்களின் நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது. இவர்கள் எம்முடன் இணைய முடியும். நாகரீகமான அரசியலைக் காணமுடியும்.

இந்த இரண்டு கட்சிகளாலும் இந்த நாடு அடைந்த பயன் எதுவும் இல்லை. நாட்டை சீரழித்து ஊழல் செய்து நாசமாக்கியதைத் தவிர எதையும் அந்தக் கட்சிகள் செய்யவில்லை.

இவ்வாறான கட்சிகளால் இனியும் இந்த நாட்டுக்கு நன்மை ஏற்படப் போவதில்லை. இந்தக் கட்சிகளில் தலைமைத்துவ மாற்றத்தை ஏற்படுத்தினாலும் எந்தவொரு முன்னேற்றமும் ஏற்படப்போவதில்லை. நாட்டுக்கு நன்மை ஏற்படப் போவதில்லை.

புதிதாக வரும் தலைவர்களும் அப்படியேதான் இருப்பார்கள். அவர்கள் ஊழல் அரசியலில் ஊறிப் போனவர்கள். ஜே.வி.பியைப் போன்ற தூய அரசியல் அவர்களிடம் இல்லை.

அரசியலுக்கு வருவது கொள்ளையடிக்கத்தானே தவிர நாட்டுக்குச் சேவை செய்வதற்கு அல்ல என்பதை இவர்களின் செயற்பாடுகளின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

இந்தக் கட்சிகளில் மக்கள் தொடர்ந்தும் தொங்கிக்கொண்டு இருக்கக்கூடாது. அது நாட்டுக்கு மேலும் அழிவையே ஏற்படுத்தும். இதற்கு ஒரேயொரு மாற்றுவழி ஜேவிபிதான். நாம் நடைமுறையில் இதை நிரூபித்துக்காட்டியுள்ளோம். மக்கள் இனியாவது சிந்தித்துப் பார்த்துச் செயற்பட வேண்டும். நாட்டைப் பாதுகாக்க எம்முடன் கைகோர்க்க வேண்டும். ■

“ ரவி கருணாநாயக்க மற்றும் அர்ஜுன மஹேந்திரன் போன்றவர்கள் இந்த ஊழலின் பங்காளிகள்தான். பிரதான குற்றவாளி ரணில். அவரை மஹிந்த பாதுகாக்கிறார். ரணில் – மஹிந்த உறவு இதன் மூலம் தெளிவாகத் தெரிகிறது. இந்த உறவின் காரணமாகவே மஹிந்த ஆட்சியின் குற்றவாளிகளை ரணில் தண்டிக்கவில்லை.

# ‘ஒப்பிரேஷன் கொரோனா!’

யாழ்ப்பாணம்,மார்ச் 26

யாழ்ப்பாணம் மாநகர எல்லையில் பொதுமக்கள் கூடும் இடங்களில் கிருமித் தொற்று நீக்கி விசிறும் பணிகளை கொழும்பிலிருந்து வருகை தந்துள்ள சிறப்பு அதிரடிப்படையினர் முன்னெடுத்துள்ளனர்.





யாழ்ப்பாணம் பிரதேச செயலர் எஸ். சுதர்சன் தலைமையில் பணிகள் நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டன. யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பணிகள், மாநகரில் பொதுமக்கள் கூடும் இடங்களில் முன்னெடுக்க ப்படவுள்ளன.

சிறப்பு அதிரடிப் படையினருடன், மாநகர பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், யாழ்ப்பாணம் பிரதேச செயலக கிராம சேவையாளர்கள் உள்ளிட்டோர் இணைந்துள்ளனர். கொரோனா வைரஸ் தொற்றுப் பரம்பலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நாடுமுழுவதும் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், பொதுமக்கள் கூடும் இடங்களில் கிருமித் தொற்று நீக்கி விசிறப்படும் செயற்பாடுகள் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-111)

# நயினாதீவு ஆலயத்தினரால் மக்களுக்கு நிவாரணம்



யாழ்ப்பாணம்,மார்ச் 26

நயினாதீவைச் சேர்ந்த மக்களுக்கான உணவு பொருள்களை, அவர்களது வீடுகள் தேடிச் சென்று வழங்கும் பணிகளை நாகபூசணி அம்மன் ஆலயத்தினர் முன்னெடுத்துள்ளனர்.

நாட்டில் கொரோனா தாக்கத்தால் ஊரடங்கு உத்தரவு பிறப்பி க்கப்பட்டுள்ளது. இதனால் நாள் கூலியைநம்பிவாழ்க்கை நடத்தும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.இவர்களுக்கான உணவுப் பொருள்களை வீடுகளுக்குச் சென்று வழங்கும் பணியை நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தினர் முன்னெடுத்து வருகின்றனர்.

அதன் முதற்கட்டமாக ஆலயத்தின் ஊழியருக்கு நேற்று வழங்கப்பட்டன.

இதற்கானஒத்துழைப்பை பொலிஸார் மற்றும் கடற்படையினர், சுகாதார பரிசோதகர்கள் வழங்கினர் என்று ஆலயத்தினர் தெரிவித்தனர். (க-7)



# முல்லைத்தீவில் வறிய மக்களுக்கு நிவாரணம்

வவுனியா, மார்ச் 26

கொரோனா தொற்றுக் காரணமாக ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் வறுமைக் கோட்டின் கீழுள்ள மக்களின் நிலையைக் கருத்தில் கொண்டு வடக்கு மாகாண ஆளுநரால் அனுப்பிவைக்கப்பட்ட கோதுமை மாவை அவர்களுக்கு வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் கே. விமலநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது;

வட மாகாண ஆளுநர் ஊடாகக் கிடைக்கப்பெற்ற ஆறு மெற்றிக்தொன் கோதுமை மாவை முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலகங்கின் கீழ் உள்ள கிராம அலுவலர்கள் ஊடாக வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மாவட்டத்தில் உள்ள சமுர்த்தி நிவாரணம் கிடைக்காத மக்கள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு கிராம அலுவலர்கள் ஊடாக குறித்த கோது மை மாவை வழங்கிவைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றார். (ப-19)

## துணுக்காயில்,
# விசேட தேவையுடையோருக்கான கொடுப்பனவுகள் வங்கிகளுக்கு

முல்லைத்தீவு, மார்ச் 26

துணுக்காய் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட விசேட தேவையுடையயோர், மற்றும், சிறுநீரக நோயாளர்களுக்கான மார்ச் மாதக் கொடுப்பனவுகள் பயனாளிகளின் வங்கிக்கணக்குக்கு வைப்பிலிடப்பட்டுள்ளன.

தற்போதைய நாட்டின் சூழ்நிலை காரணமாக தபாலகங்கள் இயங்காத காரணத்தால், முதியோர்களுக்கான மார்ச் மாதத்துக்குரிய கொடுப்பனவும், அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்கள் மூலம் பயனாளிகளுக்கு நேரடியாக செலுத்துவதற்குரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் உங்கள் பிரிவு கிராம அலுவலரது தொலைபேசி இலக்கத்தினூடாகத் தொடர்புகளை மேற்கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த நடவடிக்கைகள் அனைத்தும், பொதுமக்களின் ஒன்றுகூடல்களைத் தவிர்ப்பதன் மூலம் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தப்படுகின்றது. எனவே பொது மக்களும் கூடியளவில் பொது இடங்களில் ஒன்று சேர்வதைத் தவிர்த்து குறித்த செயற்பாட்டுக்கு முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது

ஊரடங்கு நீடிக்கப்படும் பட்சத்தில் கிராமங்கள் தோறும் நடமாடும் வியாபார நிலையங்கள் மூலம் அத்தியாவசியப் பொருள்களை மக்களுடைய பகுதிகளுக்கு விநியோகிப்பதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதால், அவற்றின் மூலம் கூடியளவில் உங்கள் தேவைகளைப்பூர்த்திசெய்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

ஊரடங்கு தளர்த்தப்படும் நேரங்களில் வியாபார நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் ஒன்று கூடுவதையும் பூரணமாகத் தவிர்த்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ப-19)



# மன்னார் நகரப்பகுதிகளில் கிருமி நீக்கும் நடவடிக்கை

மன்னார்,மார்ச் 26

மன்னார் நகர சபை பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் கிருமி நீக்கும் நடவடிக்கை நேற்றுமுன்தினம் மாலை முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் நகர சபையின் ஏற்பாட்டில் நகரசபைத்தலைவர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமையில் கிருமி நீக்கும் நடவடிக்கை முன்னெ டுக்கப்பட்டது.

மன்னார் நகர சபைக்குட்பட்ட வங்கிகள், தன்னியக்க பணப்பரிமாற்ற இயந்திரம் (ஏ.ரி.எம்), தபாலகம்,மாவட்ட செயலக பிரதான பாதை, பல்பொருள் விற்பனை நிலைய வீதி,பொலிஸ் நிலைய வளாகம் உட்பட மக்கள் பயன்படுத்துகின்ற முக்கிய இடங்களில் கிருமி நீக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (ஐ-56)



யாழ்ப்பாணம் ஆயர் இல்ல சிற்றாலயத்தில் நேற்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாண மறை மாவட்ட குரு முதல்வர் அருட்பணி ஜோசப் தாஸ் ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் ஆராதனைகள் நடைபெற்றன. ஊரடங்கு காரணமாக கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பு பெருவிழாவில் பக்தர்கள் பங்கு கொள்ளவில்லை. (ஐ-7)

# பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு ரூ.10 ஆயிரம் நிதியுதவி

ஏழாலை,மார்ச் 26

சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தனது அங்கத்தவர் மற்றும் பணியாளர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா நிதியுதவியை வழங்கியுள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு வடக்கில் தொடர்ச்சியாக ஊரடங்குச் சட்டம் அமுல்ப் படுத்தப்பட்ட நிலையில் சீவல் தொழிலாளர்கள் தொழில் செய்யமுடியாத நிலையில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் பாதிக்கப்பட்ட தொழிலாளிகளுக்கு உதவியளிக்கும் நோக்கில் இவ் உதவித் தொகை வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

நடமாடும் சேவையூடாக வீடுகளுக்குச் சென்று இவ் உதவித் தொகை வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-39)

# யாழ்ப்பாண மாநகர பகுதிக்குள் இன்று கழிவகற்றல் செயற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்ப்பாண மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் இன்று காலை தொடக்கம் கழிவகற்றல் செயற்பாடு நடைபெறவுள்ளதாக மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை நாடுபூராகவும் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டத்தை அடுத்து யாழ்ப்பாண மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் கழிவகற்றல் செயற்பாடு தடை செய்யப்பட்டது.

இதனால் வீதி எங்கும் குப்பைகள் தேங்கிக் காணப்படுகின்றன.

இன்று வியாழக்கிழமை காலை 7 மணி முதல் யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் கழிவகற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் கழிவகற்றல் செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# கொரோனாவில் இருந்து முழுமையாக குணமாகலாம்!

## இலங்கையின் முதல் தொற்றாளி அறிவுரை

*கொழும்பு, மார்ச் 26*

*முறையாகத் தனிமைப்படுத்தினால் கொரோனா வைரஸில் இருந்து முற்றாகத் தப்பிக்க முடியும். எவரும் இதிலிருந்து ஒளிய வேண்டாம் என்றும் முதலாவதாக கொரோனா தொற்றுக்கு ஆளாகி முழுமையாகக் குணமடைந்த சுற்றுலா பயணிகள் வழிகாட்டியான ரணசிங்க தெரிவித்துள்ளார்.*

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் உலகம் முழுவதுக்கும் மிகப் பெரிய ஆபத்தாகும். கொரோனா தொற்று இருப்பதாக சந்தேகித்தால் முதலில் நம்மை நாமே தனிமைப்படுத்த வேண்டும். இதுதான் முதல் மருந்து.

கொரோனாதொற்று இருப்பது 14 நாள்களுக்குள் தெரிய வரும். அப்படித் தெரிய வந்ததும் உடனடியாக சிகிச்சை பெற்றுக்கொண்டால் கொரோனா நோயில் இருந்து தப்பித்துவிடலாம். இதற்கு உதாரணம் நானே.

இலங்கையில் முதலாவது கொரோனா தொற்றுக்கு ஆளான சீனப் பிரஜை முழுமையாகக் குணமடைந்தார். அடுத்ததாக நான் குணமடைந்தேன். தயவு செய்து எவரும் இதை அலட்சியம் செய்ய வேண்டாம். இதன்மூலம் உங்களையும் உங்கள் குடும்பங்களை யும் பாதுகாக்க முடியும் - என்றார். (ஒ,5)

# ஊரடங்கில் 'கிரிக்கெட்' ஐவர் கைது!

கொழும்பு, மார்ச் 26

பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை மீறும் வகையில் செயற்பட்ட ஐந்து பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மொக்கா தோட்டத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

'கொரோனா' வைரஸை கட்டுப்படுத்துவதற்காக அரசு நாடு தழுவிய ரீதியில் ஊரடங்கு சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. அத்துடன், தற்பாதுகாப்பை உறுதிப்படுத்தி வீட்டுக்குள் இருக்குமாறும் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

எனினும், இதனை கருத்திற்கொள்ளாது விளையாட்டில் ஈடுபட்டவேளையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை ஹட்டன் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அரசாலும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தரப்பினராலும் வழங்கப்படும் ஆலோசனைகளை உரிய வகையில் கடைபிடித்து, 'கொரோனா' ஒழிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு குறித்த பகுதி மக்களிடம் பொலிஸார் வேண்டுகோள் விடுத்தனர். (ஒ,5,44)

# கோதுமை மா விநியோகம்

பளை, மார்ச் 26

ஊரடங்குச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களுக்கு கோதுமை மா வழங்கப்பட்டது. பிரதேச செயலகத்தால் பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களைக்கொண்ட குடும்பங்களுக்கும், 5 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களுக்கும் தலா இரண்டு கிலோ மா நேற்று முன் தினம் வழங்கப்பட்டது. (ஐ-9)

# பாதுகாப்பு ஏற்பாடுகளின்றி ஊரடங்கு வேளையில் பணி!

## தோட்டத் தொழிலாளர்கள் அவதி

கொழும்பு, மார்ச் 26

மலையக பெருந்தோட்டப் பகுதியில் சில தோட்டங்களில் எவ்வித சுகாதார தற்பாதுகாப்பு நடவடிக்கையுமின்றி தோட்டத் தொழிலாளர்கள் நேற்றும் நாளாந்த தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் முகக்கவசம் அணிந்திருக்கவில்லை. கைகளைக் கழுவுதல் உட்பட தற்பாதுகாப்பு சுகாதார நடைமுறைகளைக்கூட பின்பற்றாமல் தொழிலில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சில தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களுக்கு முகக்கவசங்களை வழங்கியிருந்தாலும் பெரும்பாலான நிறுவனங்கள் தொழிலாளர்களுக்கு சுகாதார வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கவில்லை என்று தலவாக்கலை, அக்கரபத்தனை, டயகம பகுதிகளிலுள்ள தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

"தோட்ட நிர்வாகங்களால் எவ்வித வசதிகளும் செய்துகொடுக்கப்படவில்லை. பொலிஸ் ஊடரங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும்போதுகூட நாளாந்த தொழில் நடவடிக்கைகளுக்கு நிர்ப்பந்திக்கப்படு கின்றோம். என்று தொழிலாளர்கள் தரப்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

"சம்பள முற்பணம்கூட இன்னும் வழங்கப்படவில்லை. ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்பட்ட பின்னர்கூட பொருள்களை வாங்கமுடியாமல் சிரமங்களை எதிர்கொண்டுவருகின்றோம்.

கொழும்பு உட்பட வெளியிடங்களில் தொழில் புரிந்தவர்கள்கூட தற்போது வீடுகளுக்கு வந்துவிட்டனர். அதனால் பொருளாதார ரீதியில் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கிவருகின்றோம். அரசு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்தனர். (த-44)

# நிவாரணம் வழங்க நிதி அனுமதி தருக!

## ஆளுநரிடம் கோரியது மானிப்பாய் பிரதேச சபை

யாழ்ப்பாணம், மார்ச் 26

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் அதிகளவானோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதால் அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு சபை நிதியைப் பயன்படுத்த அனுமதி வழங்குமாறு வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசன், வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சாள்ஸிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஆளுநருக்கு அவர் நேற்று முன் தினம் கடிதம் அனுப்பியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"நாட்டில் நிலவிவரும் அசாதாரண சூழ்நிலை காரணமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் காரணமாக நோய்த் தொற்றுக்கு உள்ளாகியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வலிகாமம் தென்மேற்கு பிரதேசம் அதாவது மானிப்பாய்ப் பகுதியில் உயர்வடைந்து வரும் வேளை அவர்களுக்கான அத்தியாவசிய பொருள்கள் சேவைகளை வழங்குவதற்கு எமக்குள்ள சட்ட ஏற்பாட்டிற்கமைய சபை நிதியைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ,5)

# ஊரடங்கில் கைவரிசை 20 கோழிகள் திருட்டு!

யாழ்ப்பாணம், மார்ச் 26

ஊரடங்கு அமுலில் இருந்த வேளை, வீடொன்றில் 20 கோழிகள் திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் திருநெல்வேலி சிவன் அம்மன் ஆலயப் பகுதியில் நேற்று முன் தினம் அதிகாலை 3 மணியளவில் நடந்துள்ளது.

பரமேஸ்வராச் சந்தியில் இருந்து ஆலய வீதிக்குச் செல்லும் சிவன் வீதியில் ஆலயத்தின் மேற்கு வீதியில் உள்ள வீட்டுக்குள் அதிகாலை வேளையில் உட்புகுந்த திருடர்களே கூட்டில் இருந்த 20 கோழிகளையும் திருடிச் சென்றுள்ளனர்.

திருடப்பட்ட கோழிகளின் தற்போதைய சந்தைப் பெறுமதி சுமார் 14 ஆயிரம் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. திருடர்களின் நடமாட்டம் தொடர்பில் காலை வரை வீட்டார் அறிந்திருக்காத போதிலும், அயலில் உள்ளவர்கள் ஊரடங்கு வேளை படையினர் நடமாடுவதாக எண்ணியதால் கவனம் கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (சு-105)

# இனிமேல் வீடு தேடி வருகிறது பசுப்பால்!

## யாழ்கோ நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்கோ நிறுவனம் பசுப்பாலை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. பால் தேவைப்படும் வாடிக்கையாளர்கள் தங்கள் கிளை முகாமையாளர்களை தொடர்பு கொள்ள முடியும். சேவைக் கட்டணம் அறவிடப்படும். மேலதிக விவரங்களை 077 618 1889, 077 421 5155 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ள முடியும். மேலும் யாழ்கோவின் அங்கத்தவர்களாக உள்ள பால் உற்பத்தியாளர்கள் பாலைக் கொண்டு செல்லும் பொழுது ஊரடங்கு சட்டம் தொடர்பில் இடர்பாடுகள் ஏற்படின் உடனடியாக 077 744 4031 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஒ,5)

# கொரோனாவை அழிக்க இந்தியாவாலே முடியும்!

## உலக சுகாதார நிறுவனம் நம்பிக்கை

**புதுடெல்லி, மார்ச் 26**

**கொரோனாவை அழிப்பதற்கு இந்தியாவால் முடியும். இரண்டு தொற்றுநோய்களை இல்லாமல் அழித்த பெருமை இந்தியாவுக்கு உள்ளது இவ்வாறு தெரிவித்துள்ளார் உலக சுகாதார நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மைக்கல் ரியான்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரண்டு தொற்று நோய்களை நாட்டில் இருந்து ஒழித்ததில் இந்தியா உலகுக்கே முன்னிலையாக விளங்கியது. பெரிய அம்மை நோயை ஒழித்து உலகுக்கு சிறந்த பரிசை வழங்கியது. போலியோவையும் இந்தியா ஒழித்துவிட்டது. எனவே இந்தியாவுக்கு வியக்கத்தக்க திறன் இருக்கிறது. இந்தியா போன்ற நாடுகள் கொரோனா வைரஸ் தாக்குதலை தடுப்பது குறித்து என்ன செய்ய வேண்டும் என்று உலகுக்கு காட்ட வேண்டும். இந்த வைரஸுக்குத் தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்படுமா என்பதற்கு எளிதில் பதில் சொல்ல முடியாது. இதற்கு முன்பு செய்ததுபோல இந்தியா இப்போதும் உலகுக்கு வழிகாட்ட வேண்டும் - என்றார். (ம)

# ஊரடங்கை மீறினால் 6 மாதம் சிறையில்!

புதுடெல்லி, மார்ச் 26

ஊரடங்கை மீறினால் ஆறு மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்க இந்திய மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. அத்துடன் ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்படவும் வாய்ப்பு உள்ளதாகக் கருதப்படுகின்றது.

கொரோனா பரவலைத் தடுக்கும் வகையில் இந்தியாவில் 21 நாள்களுக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நிலமை மேலும் மோசமடையக்கூடாது என்பதற்காக இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுகின்றது. பொது மக்கள் அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று மோடி நேற்றுமுன்தினம் வேண்டுகோள் விடுத்திருந்தார். எனினும் மக்கள் ஆங்காங்கே வீதிகளுக்கு வருவது தொடர்கதையாகி வருவதால் ஊரடங்களை மீறுவோருக்கு 6 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கவும், ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கவும் வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# தமிழகத்தில் முதல் பலி!

புதுடெல்லி, மார்ச் 26

கொரோனா வைரஸால் தமிழகத்தில் நேற்று ஒருவர் உயிரிழந்தார்.

இந்தியாவின் தமிழகத்திலும் 15 பேருக்கு வைரஸ் பரவி இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதற்கிடையே, கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்ட 54 வயது நிரம்பிய நபர் மதுரை ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். அவர் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். இதையடுத்து கொரோனாவால் இந்திய அளவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 16ஆக அதிகரித்தது. (ம)



# தொற்றுநீக்கி ஏற்றுமதிக்கு இந்திய அரசு தடைவிதிப்பு

புதுடெல்லி, மார்ச் 26

சுவாசக் கருவிகள், தொற்றுநீக்கிகள் ஏற்றுமதிக்கு இந்திய அரசு தடைவிதித்து உத்தரவிட்டுள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவலை தடுக்கவும், பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு சிகிச்சை அளிக்கவும் மத்திய, மாநில அரசுகள் முழு முனைப்புடன் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. இந்தியாவில் 500க்கும் மேற்பட்டோரை கொரோனா வைரஸ் பாதித்துள்ள நிலையில், கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்கிற வகையில் சானிடைசர் என்று அழைக்கப்படுகிற ஆல்கஹால் கலந்த திரவத்தை பயன்படுத்தி பொதுமக்கள் அடிக்கடி கை கழுவ ஊக்குவிக்கப்படுகிறது. இந்த சானிடைசர் பற்றாக்குறை ஏற்பட்டு விடாமல் தடுக்கிற வகையில், அதன் ஏற்றுமதிக்கு தடை விதித்து இந்திய மத்திய அரசு நேற்று அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளது. இதேபோன்று கொரோனா வைரஸ் பாதிப்புக்கு ஆளானவர்களுக்கு உயிர்காக்கும் சுவாச கருவிகள் தேவை நிறைய உள்ளதால், அனைத்து விதமான சுவாசக் கருவிகளை ஏற்றுமதி செய்யவும் இந்திய மத்திய அரசு தடை விதித்துள்ளது. (ம)

# சமூக வலைத்தளங்கள் மூலம் மதக் குரோதம் வளர்க்காதீர்!

## மதபோதகர் விடயத்தில் மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 26

அரியாலையிலுள்ள தேவாலயத்தில் ஆராதனை நடத்திய மதபோதகருக்கு கொரோனா தொற்று இருந்தமை தொடர்பில், பல சமூகவலைத்தளங்கள் மதங்களுக்கிடையில் மேற்படி நிகழ்வை பயன்படுத்திக் குரோதத்தை வளர்க்க முயற்சிக்கின்றன. இந்த நேரத்தில் உணர்ச்சி பொங்காமல் சுய அறிவை பயன்படுத்துமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னாரிலிருந்து இந்த நிகழ்வில் பலர் கலந்து கொண்டனர். மருத்துவர்கள் மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரிகள் இந்தச் சூழ்நிலையை மிக அருமையாகவும் மனிதாபிமானமாகவும் கையாண்டனர். அவர்கள் அனைவரும் பாதுகாப்பானவர்களாகவும் மற்றும் சமூகத்தின் ஏனையவர்கள் இவர்களிடம் இருந்தும் கொரோனா தொற்று நோயிலிருந்தும் பாதுகாப்பாக உள்ளனர்.

இந்தச் சம்பவத்தை பயன்படுத்தி மக்கள் மத்தியில் வெறுப்பையும் பிளவையும் ஊக்குவிக்கக் காத்திருக்கும் சந்தர்ப்பவாதிகளின் வலையில் சிக்காமல் மக்களை அமைதியாக இருக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

எங்களில் சிலர் இப்போது உணர்ச்சிவசப்பட்ட முட்டாள்களாக நடந்துகொண்டு உள்ளூர் மக்களிடையே தேவையற்ற பீதியை உருவாக்குவதைக் கண்டு மிகவும் வருத்தமாக இருக்கிறது. இதனை மக்கள் உணர்ந்து கொண்டு சமூக அக்கறையுடன் செயற்படுமாறு கேட்டு கொள்கிறோம், என்றுள்ளது. (ஓ,5)

# ஊரடங்கில் மதுபோதை மொட்டு கட்சிகாரர் கைது



யாழ்ப்பாணம், மார்ச் 26

ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள நிலையில், நேற்று முன் தினம் இரவு மதுபோதையில் நடமாடித்திரிந்தார் என்ற குற்றச்சாட்டில் பொது ஜன பெரமுனவின் வட்டுக்கோட்டை அமைப்பாளர் கைது செய்யப்பட்டார் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணைகளின் பின்னர் அவர் மல்லாகம் நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (கு-111)

# தவித்த முயலடித்த வியாபாரிகள்

ஊரடங்குத் தளர்வின்போது விவசாய உற்பத்திப் பொருள்களை விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்குப் பெற்று அதனை அதிகூடிய விலைக்கு வியாபாரிகள் விற்றுள்ளனர். இந்தக் குற்றச்சாட்டை பெரும்பாலான விவசாயிகள் முன்வைத்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6 மணியிலிருந்து ஊரடங்குச் சட்டம் வடக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதனால் விவசாயிகள் தமது விளைபொருள்களை சந்தைப்படுத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர். நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 6 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையில் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டது.

இதனையடுத்து சகல விவசாயிகளும் சந்தையை நோக்கிப் படையெடுத்தனர். அதேபோன்று மரக்கறிகளைக் கொள்வனவு செய்யவும் மக்களும் சந்தைகளை நோக்கிப்படையெடுத்தனர். விவசாயிகளிடமிருந்து மிகக் குறைந்த விலைக்கு பொருள்களைக் கொள்வனவு செய்த வியாபாரிகள் அதே பொருள்களை இரண்டு மடங்கு விலைக்கு விற்பனை செய்தனர்.

மேலும், ஊரடங்குச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள சூழலில் விவசாயிகள் தமது விளைபொருள்களை தமது ஊரிலேயே விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இந்த நடைமுறை பெரும்பாலான கிராமங்களில் பின்பற்றப்பட்டு வருகின்றது. (ஓ,5)

# விடுபட்டது வோ

கொரோனா வைரஸால் இத்தாலி கடுமையான பாதிப்பைச் சந்தித்துள்ள நிலையில், அந்த நாட்டில் உள்ள வோ நகரம் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றைத் தோற்கடித்துள்ளது.

உலக நாடுகளை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸால் மிகப் பெரும் பாதிப்பை இத்தாலி எதிர்கொண்டுள்ளது. சுமார் 7 ஆயிரம் பேர் இத்தாலியில் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். சுமார் 65 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கொரோனா வைரஸ் தொற்றால் இத்தாலியே கடும் பாதிப்பைச் சந்தித்துள்ள வேளையில் அங்குள்ள வோ நகரம் மற்ற நகரங்களுக்கு எடுத்துக்காட்டாக கொரோனாவில் இருந்து முழுவதும் விடுபட்டுள்ளது. (ம)



# ரஷ்யாவில் நிலநடுக்கம்

மொஸ்கோ, மார்ச் 26

ரஷ்யாவின் குரில் தீவில் நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவில் 7.5 அலகுகளாக இந்த நிலநடுக்கம் பதிவானது.

ஜப்பானிய நகரமான சப்போராவில் இருந்து வடகிழக்கில் ஆயிரத்து 400 கிலோமீற்றர் தொலைவில் 59 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. நிலநடுக்கத்தின் மையப்பகுதியில் இருந்து 1000 கிலோமீற்றர் தூரத்திற்குள் அபாயகரமான சுனாமி அலைகள் ஏற்படலாம் என பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையம் எச்சரித்தது. அமெரிக்காவின் ஹவாய் தீவையும் சுனாமி அலைகள் தாக்கலாம் எனவும் எச்சரிக்கை விடப்பட்டது. (ம)



# கிரெட்டாவுக்கு கொரோனாவா?

## அதிர்ச்சியில் உலகம்

லண்டன், மார்ச் 26

பருவநிலை மாற்றத்துக்கு எதிராகக் குரல்கொடுத்து வந்த தன்னார்வலர் கிரெட்டா தன்பேர்க், தனக்குக் கொரோனா அறிகுறிகள் உள்ளன என்று தெரிவித்துள்ளார்.




சுவீடன் நாட்டைச் சேர்ந்த சிறுமிதான் கிரெட்டா தன்பேர்க். இவர் பருவ வெப்பநிலைக்கு எதிராகப் பல்வேறு போராட்டங்களை நடத்திவந்தார். அமெரிக்காவின் ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையில் கடந்த ஆண்டு செப்டம்பர் 23ஆம் திகதி நடைபெற்ற பருவநிலை மாற்றம் குறித்த மாநாட்டில் தன்பெர்க் உலகநாட்டு தலைவர்களை நோக்கி 'பருவநிலை மாற்றத்தால் நாம் அனைவரும் பேரழிவின் தொடக்கத்தில் இருக்கிறோம். ஆனால் நீங்கள் பணம், பொருளாதார வளர்ச்சி போன்ற கற்பனை உலகத்தைப்பற்றி பேசிக்கொண்டு இருக்கிறீர்கள். உங்களுக்கு எவ்வளவு தைரியம் இருக்கும்?' என ஆக்ரோஷமாக முழங்கினார்.

அந்த மாநாட்டிற்கு பின் கிரேட்டா தன்பெர்க் உலக அளவில் அனைவராலும் பேசப்படும் நபராக உருவெடுத்தார். இதற்கிடையே, கடந்த 10 நாட்களுக்கு முன்பு கிரேட்டா தனது தந்தையுடன் கொரோனா வைரஸ் வேகமாக பரவி வரும் மத்திய ஐரோப்பிய நாடான பெல்ஜியத்துக்குச் சென்றுள்ளார்.

பின்னர் அங்கிருந்து சொந்த நாடான சுவீடன் திரும்பிய தன்பேர்க்குக்கும், அவரது தந்தைக்கும் கடந்த சில நாட்களாக காய்ச்சல், இருமல் உள்ளிட்ட கொரோனா அறிகுறிகள் ஏற்பட்டுள்ளன. இதையடுத்து, இருவரும் வீட்டில் தங்களைத் தாங்களேகவே தனிமைப்படுத்திக்கொண்டுள்ளனர்.

இந்த நிலையில், இது குறித்து கிரேட்டா தன்பெர்க் தனது சமூக வலைத்தள பக்கமான இன்ஸ்டாகிராமில், கடந்த 10 நாட்களாக எனக்கு கொரோனா வைரஸ் அறிகுறிகள் இருப்பது போன்று உணர்கின்றேன். எனக்கு உடல் நடுக்கம், இருமல், தொண்டைக் கரகரப்பு உள்ளிட்ட பிரச்சனைகள் கடந்த சில நாட்களாக உள்ளன - என்று குறிப்பிட்டுள்ளார். (ம)

# கைவிடப்பட்ட முதியவர்கள் 12பேர் படுக்கையில் இறப்பு

மட்ரிட், மார்ச் 26

கொரோனா வேகமாக பரவிவரும் ஸ்பெயின் நாட்டில் கைவிடப்பட்ட முதியோர் 12 பேர் படுக்கையிலேயே உயிரிழந்தனர்.

ஐரோப்பிய நாடான ஸ்பெயினில் கொரோனா வைரஸால் இதுவரை 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். வைரஸ் பரவலை தடுக்க அந்த நாட்டு அரசு தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்த நிலையில் முதியோருக்கு கொரோனா வைரஸ் எளிதாக தொற்றிக்கொள்ளும் என்பதால் ஆதரவற்றோர் இல்லங்களில் வசிக்கும் முதியவர்களின் நிலை குறித்து கண்டறிய அந்த நாட்டு இராணுவ வீரர்களை பல்வேறு இடங்களுக்கு குழுவாக அரசு அனுப்பியது. மேற்படி சோதனையொன்றில் அங்குள்ள முதியோர் இல்லம் ஒன்றில் பாதுகாக்க ஆட்கள் இன்றி கைவிடப்பட்ட நிலையில் 12 முதியவர்கள் உயிரிழந்து கிடந்தமை தெரியவந்துள்ளது. (ம)




# பயணக் கட்டுப்பாட்டை அகற்றியது சீன அரசு!



பீஜிங், மார்ச் 26

கொரோனாவின் பிறப்பிடமான சீனாவில் பயணக் கட்டுப்பாட்டுக்களைக் கைவிட உத்தரவிட்டுள்ளது சீன அரசு. கொரோனா வைரஸ் காரணமாக சீனா முழுவதுமாக முடக்கப்பட்டது. சீனாவில் இருந்து எவரும் வெளியில் செல்லவோ அல்லது சீனாவுக்குள் வேறு நாட்டைச் சேர்ந்தவர்களோ வருவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் பயணக் கட்டுப்பாட்டைக் கைவிட்டது சீனா.

கொரோனாவில் இருந்து விடுபட்டதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.03.2020 இல் வெளியிடப்பட்டது.

# பாகிஸ்தானின் கோலி என என்னை அழைக்காதீர்கள்!

*ஹைதர் அலி குற்றச்சாட்டு*

இஸ்லாமபாத், மார்ச் 26
என்னை பாகிஸ்தானின் கோலி என்று அழைப்பதை நான் விரும்பவில்லை இவ்வாறு தெரிவித்தார் பாகிஸ்தானின் இளம் வீரர் ஹைதர் அலி.

பாகிஸ்தான் அணியின் இளம் நட்சத்திர வீரர் ஹைதர் அலி. இவர் தென்னாபிரிக்கத் தொடரில் சிறப்பாக விளையாடினார். அதேபோல் பாகிஸ்தான் சூப்பர் லீக் டி20 தொடரில் சிறப்பாக விளையாடினார். வருங்காலத்தில் பாகிஸ்தான் தேசிய கிரிக்கெட் அணியில் முன்னணி வீரராக அலி திகழ்வார் என்று நம்பப்படுகின்றது. இந்த நிலையில் தன்னை விராட் கோலி என்று அழைப்பதை அவர் கண்டித்துள்ளார். இது தொடர்பில் அலி மேலும் தெரிவித்ததாவது:

எனக்கு நானே சிறப்பாக முன்னேற விரும்புகிறேன். ரசிகர்கள் என்னை பாபர் அசாம் என்று அழைக்க வேண்டும். விராட் கோலி என்று அழைக்கக்கூடாது. ஏனென்றால், பாபர் அசாம் அற்புதமாக விளையாடுகின்றார் - என்றார். (ம)



# பார்சிலோனா மருத்துவமனைக்கு மெஸ்ஸியால் 10லட்சம் யூரோக்கள்

*கொரோனா நிவாரணத்துக்கு வழங்கினார்*

மட்ரிட், மார்ச் 26
கொரோனா சிகிச்சைக்காக பார்சிலோனா நட்சத்திரம் மெஸ்ஸி 10 லட்சம் யூரோக்களை அன்பளிப்பாக வழங்கினார்.

ஐரோப்பிய நாடுகளில் இத்தாலிக்கு அடுத்தபடியாக ஸ்பெய்ன் கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. ஆர்ஜென்ரீன கால்பந்தாட்ட அணியின் தலைவரான மெஸ்ஸி ஸ்பெய்னின் பார்சிலோனா கால்பந்தாட்டக் கழகத்தின் தலைவராகவும் உள்ளார். அந்தக் கழகத்தாலேயே மெஸ்ஸி வளர்க்கப்பட்டார். இதனால் ஸ்பெய்ன் மீதும் மெஸ்ஸிக்கு மிகுந்த பற்று உள்ளது. இந்த நிலையில் பார்சிலோனா அரச மருத்துவமனைக்காக இந்த நிதியை அவர் வழங்கியுள்ளார். (ம)





# பிற்போடப்பட்டது ஒலிம்பிக் தொடர்!

டோக்கியோ, மார்ச் 26
ஒலிம்பிக் தொடர் அடுத்த ஓராண்டுக்குத் தள்ளிவைக்கப்படுகின்றது என்று சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

உலகின் மிகப்பெரிய விளையாட்டு நிகழ்வாக ஒலிம்பிக் தொடர் கருதப்படுகின்றது. இந்தத் தொடர் எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறுவதாக இருந்தது. இந்த நிலையில் சீனாவின் வுகான் மாநிலத்தில் தோற்றம்பெற்ற கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவி பேரச்சத்தை ஏற்படுத்தி வருகின்றது. இதனால் கிரிக்கெட் தொடர்கள், கால்பந்தாட்டத் தொடர்கள் என்பன கைவிடப்பட்டுள்ளன. ஒலிம்பிக் தொடரையும் பிற்போட வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுப்பெற்றிருந்தன. இதற்கு ஜப்பானியப் பிரதமர் ஷின்சோ அபே மறுப்புத் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் ஒலிம்பிக் தொடரை ஒரு வருட காலத்துக்குத் தள்ளிவைப்பதாக சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் அறிவித்துள்ளது. (ம)

# ஒலிம்பிக் கைவிடப்பட்டதை ஆஸ்திரேலியா வரவேற்றது!




சிட்னி, மார்ச் 26
ஒலிம்பிக் தொடர் ஒரு வருடம் பிற்போடப்பட்டமைக்கு வரவேற்புத் தெரிவித்துள்ளது ஆஸ்திரேலிய அரசு.

இது தொடர்பில் ஆஸ்திரேலிய ஒலிம்பிக் சம்மேளனம் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் தாக்கத்தினால் உலகம் முழுவதும் நிலவும் கடினமான சூழ்நிலையில் ஆஸ்திரேலிய அணியை ஓர் இடத்தில் ஒன்றுகூட வைக்க முடியாது. வீரர்கள் தங்களது சொந்த நலனுக்கும், தங்களை சுற்றி உள்ளவர்களின் நலனுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது அவசியமானதாகும். இதனால் தொடர் கைவிடப்பட்டமையை வரவேற்கின்றோம் என்றுள்ளது. (ம)

# ஸ்ரெய்ன் நீக்கம்!

ஜோகன்ஸ்பார்க், மார்ச் 26
தென்னாபிரிக்கக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஊதிய ஒப்பந்தப் பட்டியலில் இருந்து வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரெய்ன் நீக்கப்பட்டுள்ளார்.

அதேவேளையில் இளம் வேகப்பந்துவீச்சாளரான பியூரன் ஹெண்ட்ரிக்ஸ் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

36 வயதான ஸ்ரெய்ன் காயம் காரணமாக கடந்த 3 வருடங்களாக அவதிப்பட்டு வந்த நிலையில் கடந்த பெப்ரவரி மாதம் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்கு திரும்பினார். வரும் ஒக்டோபர் மாதம் ஆஸ்திரேலியாவில் நடைபெற உள்ள உலகக்கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்க அணியில் இடம்பெறும் வகையில் தன்னைத் தீவிரமாகத் தயார்ப்படுத்தி வருகிறார் ஸ்ரெய்ன்.

ஆனால் தென்னாபிரிக்ககிரிக்கெட்வாரியமோ தற்போது இளம் வீரர்கள் மீது தனது கவனத்தைத் திருப்பி உள்ளது. இதன் ஒரு அங்கமாக சம்பள ஒப்பந்த பட்டியலில் ஸ்ரெய்ன் நீக்கப்பட்டு இளம் வீரர்களான பியூரன் ஹெண்ட்ரிக்ஸ், அன்ரிச் நார்ட்ஜே, டுவைன் பிரிட்டோரியஸ், ராஸி வான் டெர்டஸ்சென் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர். (ம)



# சுயதனிமைப்படுத்தல் அவசியம் சவுரவ் கங்குலி அறிவுறுத்தினார்

புதுடெல்லி, மார்ச் 26
கொரோனா வைரஸால் இந்தியா பெரும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள நிலையில், ஒவ்வொரு மக்களும் தம்மைத்தாமே சுய தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார் கங்குலி.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

என்னுடைய நகரத்தை இப்படிப் பார்ப்பேன் என்று நினைத்துக்கூட பார்த்ததில்லை. பாதுகாப்பாக இருப்போம். இந்த சூழ்நிலை விரைவில் மிகவும் சிறப்பான வகையில் மாறும் என்று நம்புவோம் - என்றார். (ம)

செய்தி : 021 493 0000 – விளம்பரம் : 021 493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம் : advt@uthayan.com
இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.03.2020இல் வெளியிடப்பெற்றது.